தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 2013-14-ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 100 லட்சம் மெட்ரிக் டன்னை மிஞ்சும்

தமிழகத்தின் உணவு தானிய உற்பத்தி 2013-14-ஆம் ஆண்டில் 100 லட்சம் மெட்ரிக் டன் அளவை மிஞ்சும் என்று ஆளுநர் கே.ரோசய்யா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆளுநர் தன் உரையில் கூறியிருப்பது:-

வேளாண் பயிர்களின் உற்பத்தித் திறனையும் மொத்த உற்பத்தியையும் உயர்த்துவதற்கு அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

உயர் தொழில்நுட்பங்களைப் பரவலாக்குதல், நுண்ணீர்ப் பாசனம் மற்றும் பண்ணை இயந்திரப் பயன்பாட்டைப் பிரபலப்படுத்துதல் போன்றவை பின்பற்றப்பட்டு வருகிறது.

அறுவடைக்குப் பிந்தைய மற்றும் சந்தைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட, கணிசமான முதலீடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பழங்கள், காய்கறிகள் போன்ற அதிக வருவாய் தரக்கூடிய பயிர்களின் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக பல புதுமையான முறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. 2011-12-ஆம் ஆண்டில் அதிக உணவு தானிய உற்பத்தியை எட்டியதற்காக, மத்திய அரசின் கிருஷி கர்மான் விருது தமிழகத்துக்கு 2013-ஆம் ஆண்டில் கிடைத்தது மன நிறைவையளிக்கிறது. மாநிலத்தில் வடகிழக்குப் பருவமழை அளவு 33 சதவீதம் குறைவாகப் பெய்துள்ள சூழ்நிலையிலும், 2013-14-ஆம் ஆண்டில் மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி 100 லட்சம் மெட்ரிக் டன் அளவை மிஞ்சும் என அரசு எதிர்பார்ப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது.

**பொன்னேரியில் ஒருங்கிணைந்த மீன் விற்பனை அங்காடி அமைக்கப்படுமா?**

பொன்னேரியில் ஒருங்கிணைந்த மீன் விற்பனை அங்காடி நிலையத்தை அமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு பொன்னேரி பஸ் நிலையம் அருகே ஹரிஹரன் கடை வீதியில் மீன், இறைச்சி, காய்கறி உள்ளிட்ட பொருள்களை விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இதனிடையே நெடுஞ்சாலைத்துறையினர், சாலையோர ஆக்கிரமிப்புகளை அகற்றியபோது மார்க்கெட்டின் முன்பகுதி இடிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து அங்குள்ள வியாபாரிகள், திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள அம்பேத்கர் சிலை, ரயில்வே மேம்பாலம், பழவேற்காடு சாலை உள்ளிட்ட இடங்களில் மீன், இறைச்சி வியாபாரத்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்த கடைகளால் அப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது. மேலும் இறைச்சிக் கழிவுகள் சாலையோரமே கொட்டப்படுவதால் அங்கு கடும் துர்நாற்றம் வீசுகிறது.

எனவே பொன்னேரியில் மீன், இறைச்சி உள்ளிட்ட உணவுப்பொருள்களை விற்பனை செய்ய ஒருங்கிணைந்த மீன் அங்காடியை அமைக்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அப்பகுதி பொதுமக்களின் கோரிக்கையாகும்.

**பூண்டு சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி முகாம்**

கொடைக்கானலில் பூண்டு சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது.

கொடைக்கானல் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், கோழிக்கோடு பாக்கு மற்றும் வாசனைப் பயிர்கள் மேம்பாட்டு இயக்ககம் இணைந்து கொடைக்கானலில்

பூண்டு சாகுபடி தொழில் நுட்பங்கள் மற்றும் பூண்டு சாகுபடியில் மும்மடங்கு உற்பத்தி மற்றும் இரட்டிப்பு லாபம் என்ற கருத்தினில் பயிற்சி முகாம் நடத்தின.

இப் பயிற்சி முகாமிற்கு கோவை தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நறுமண பயிர்கள், மலைத்தோட்டப் பயிர்கள் துறையின் தலைவர் ப.ஜான்சிராணி தலைமை வகித்து பூண்டு விளைச்சலை அதிகரிக்க விவசாயிகள் செய்ய வேண்டிய யுத்திகள் குறித்தும், கொடைக்கானல் பகுதியில் மலைப்பூண்டின் உற்பத்தியைப் பெருக்க  சாகுபடி முறைகள் குறித்தும் பேசினார.

கொடைக்கானல் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் ஜே.ராஜாங்கம் பூண்டின் மகத்துவம் குறித்தும், மத்திய செம்மறி ஆடுகள் ஆராய்ச்சி நிலைய தலைமை ஆராய்ச்சியாளர் ஏ.எஸ்.ராஜேந்திரன் இந்திய பாரம்பரிய மருத்துவத்தில் பூண்டு குறித்தும் பேசினர்.

தோட்டக்கலை துணை இயக்குநர் எஸ்.ராஜாமுகமது பயிற்சி கையேட்டினை வெளியிட்டார்.  வேளாண் வணிக அலுவலர் எல்.நாகராஜன் டந்தைப்படுத்துதல் குறித்து பேசினார்.  பேராசிரியர்கள் சதீஷ், வெற்றிவேல்காளை, எழிலன், சரவணன் முத்துச்செல்வி ஆகியோர்  பூண்டு விதை நேர்த்தி செயல் விளக்கமும், பூச்சி தாக்குதல் பற்றிய வயல் விளக்கமும் வழங்கினர்.

உதவிப் பேராசிரியை செந்தமிழ்ச் செல்வி நன்றி கூறினார்.  இம் முகாமில் கொடைக்கானல், கவுஞ்சி, மன்னவனூர், போளூர், செண்பகனூர், பள்ளங்கி, வில்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 130 பேர் கலந்து கொண்டனர்.

### வேளாண் இடுபொருள்கள் வழங்கும் விழா

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே ம.ரெட்டியபட்டி வட்டாரம் பள்ளிமடம், முத்துராமலிங்கபுரம், பரளச்சி, கத்தாளம்பட்டி, ஆலடிபட்டி பகுதிகளில் அட்மா திட்டத்தின் கீழ் திருந்திய நெல் சாகுபடி கம்பி, மிளகாய், மக்காச்சோள பயிர்களில் செயல்விளக்க திடல்கள் அமைக்கப்பட்டன. இச்செயல் விளக்க திடல்களை அமைத்து விவசாயிகளுக்கு உரங்கள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டன. நன்கு பயிர்கள் விளைந்த வயல்களில் செயல் விளக்க திடல்கள்

அமைக்க ரூ.4 ஆயிரம் மதிப்புள்ள இடுபொருட்கள் வழங்கப்பட்டன. பயனாளியின் பங்குத் தொகையாக ரூ.400 பெறப்பட்டது. செயல்விளக்க திடலுக்கு தேவையான இடுபொருட்களை வேளாண்மை உதவி இயக்குநர் நாச்சியாரம்மாள் பயனாளிகளுக்கு வழங்கினார். இதற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரேமா, தொழில்நுட்ப வல்லுனர்கள் மாரியம்மாள், ராஜலெட்சுமி ஆகியோர் செய்திருந்தனர்.

### வேளாண் இடுபொருள்கள் வழங்கும் விழா

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே ம.ரெட்டியபட்டி வட்டாரம் பள்ளிமடம், முத்துராமலிங்கபுரம், பரளச்சி, கத்தாளம்பட்டி, ஆலடிபட்டி பகுதிகளில் அட்மா திட்டத்தின் கீழ் திருந்திய நெல் சாகுபடி கம்பி, மிளகாய், மக்காச்சோள பயிர்களில் செயல்விளக்க திடல்கள் அமைக்கப்பட்டன. இச்செயல் விளக்க திடல்களை அமைத்து விவசாயிகளுக்கு உரங்கள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டன. நன்கு பயிர்கள் விளைந்த வயல்களில் செயல் விளக்க திடல்கள் அமைக்க ரூ.4 ஆயிரம் மதிப்புள்ள இடுபொருட்கள் வழங்கப்பட்டன. பயனாளியின் பங்குத் தொகையாக ரூ.400 பெறப்பட்டது. செயல்விளக்க திடலுக்கு தேவையான இடுபொருட்களை வேளாண்மை உதவி இயக்குநர் நாச்சியாரம்மாள் பயனாளிகளுக்கு வழங்கினார். இதற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரேமா, தொழில்நுட்ப வல்லுனர்கள் மாரியம்மாள், ராஜலெட்சுமி ஆகியோர் செய்திருந்தனர்.

### வேளாண்மை செழிக்க தென்னக நதிகளை இணைக்க வேண்டும்

வேளாண் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் குறைந்தபட்சம் தென்னக நதிகளை இணைக்க மத்திய அரசு முன்வர வேண்டும் என்று விஜடி வேந்தர் ஜி.விசுவநாதன் கேட்டுக் கொண்டார்.

விஜடியில், ஊரக வளர்ச்சி மேம்பாட்டில் தொண்டு நிறுவனங்களை இணைத்து அவர்களுக்கான நிதியுதவி மற்றும் ஆலோசனைகள் வழங்குவது தொடர்பான தேசிய அளவிலான 3 நாள் பயிற்சி முகாம் வியாழக்கிழமை தொடங்கியது. இதில் விசுவநாதன் மேலும் பேசியது:

இன்றைய விவசாயிகள் கடனாளிகளாக வாழ்கின்றனர். பல விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தற்கொலை முடிவை எடுக்கும் அவல சூழலும் நிலவுகிறது. விவசாயிகளை மேம்படுத்த மத்திய, மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகின்றன. நாட்டில் வேளாண் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுவதைக் காட்டிலும் இறக்குமதி செய்வது அதிகம். இதைத் தவிர்க்க வேண்டும். நம் நாட்டுக்கு தேவையான வேளாண் பொருளை நாமே உற்பத்தி செய்வதோடு, ஏற்றுமதியையும் அதிகரிக்கச் செய்வதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

குறைந்தபட்சம் தென்னக நதிகளையாவது இணைக்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார் விசுவநாதன். பயிற்சி முகாமில் தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த வேளாண் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

### மரவள்ளிக் கிழங்கு மாவில் மக்காச்சோள மாவு கலப்பால் பாதிப்பு

மரவள்ளிக் கிழங்கு மாவில் மக்காச்சோள மாவு கலப்பதால் விவசாயிகள், நுகர்வோர்களுக்கு பெருமளவில் பாதிப்பு ஏற்படுவதாகக் குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் குற்றஞ்சாட்டினர்.

மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமையில் நாமக்கல்லில் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயிகள் பல்வேறு குறைகளைத் தெரிவித்தனர்.

இதன்படி, ஜவ்வரிசி உற்பத்தி செய்யும் சேகோ ஆலைகளில் மரவள்ளிக் கிழங்கு மாவில் மக்காச்சோளம் மாவு அதிகளவில் கலப்பு செய்யப்படுகிறது. இதனால், மரவள்ளிக் கிழக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டு, விவசாயிகள் பாதிக்கப்படுவதுடன், கலப்படம் காரணமாக நுகர்வோரும் பாதிக்கப்படுகின்றனர்.

இத்தகைய முறைகேடுகளைத் தடுக்க மாவட்ட நிர்வாகம் கண்காணிப்புக் குழு மூலம் சேகோ ஆலைகளில் தீவிர ஆய்வு செய்திட வேண்டும். இதுதொடர்பாக

அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்புக் குழுவை மாற்றியமைத்து, தகுதியானத் துறைகளை இடம்பெறச் செய்ய வேண்டும்.

கடந்தாண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டப் பயிர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக முறையான கணக்கெடுப்பு நடைபெறவில்லை. நிகழாண்டும் மழைப் பொழிவு குறைந்திருப்பதால், வறட்சி அதிகளவில் நிலவ வாய்ப்புள்ளது. எனவே, இந்த மாதம் முதலே மாதந்தோறும் பயிர் சாகுபடியைக் கணக்கிட்டு, அடங்கல் செய்வதன் மூலமாக விவசாயிகளுக்கு நியாயமான வறட்சி நிவாரணம் கிடைக்கச் செய்ய முடியும். வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் குறித்து கணக்கெடுப்பு செய்து பல மாதங்களாகியும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. இந்த நிவாரணத்தை விரைவில் வழங்கிட மாவட்ட நிர்வாகம் வழிவகை செய்திட வேண்டும். இதேபோல, கடந்தாண்டு வறட்சியையொட்டி, அரசு நிவாரணம் வழங்கப்பட்டுவிட்ட நிலையில், காப்பீடு செய்யப்பட்ட பயிர்களுக்கு இழப்பீட்டுத் தொகை இதுவரை வந்து சேரவில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை உடனடியாகக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

மாவட்டத்தில் முறைகேடாக இயங்கிய சாய ஆலைகளை பூட்டி "சீல்' வைக்கப்பட்டபோதும், பல பகுதியில் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டிருப்பது சீராகவில்லை. இந்த நீர் மாசை சீர்செய்ய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தொடர்புடைய துறை அலுவலர்கள் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) முரளி, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மழைப் பொழிவுக்கும், புவி வெப்பமயமாதலுக்கும் தொடர்பு இல்லை

மழைப் பொழிவுக்கும், புவி வெப்பமயமாதலுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று மண்டல வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

கோழிப் பண்ணைத் தொழில் நடவடிக்கைகளில் வானிலையின் தாக்கம் குறித்த கருத்தரங்கம் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் வானிலை ஆய்வு

மையத்தில் புதன்கிழமை நடைபெற்றது. கருத்தரங்குக்கு மண்டல வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் தலைமை வகித்து, குறைந்த மேகச் சலனங்கள் உருவாகுதல், அவை புயலாக மாறும் நிலை, தட்பவெப்ப நிலை, மழைப் பொழிவு உருவாகும் தன்மை, இடி ஏற்படுவதன் கூறுகள் உள்ளிட்டவை குறித்து கோழிப் பண்ணையாளர்களுக்கு விரிவான விளக்கம் அளித்தார்.

தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியது: தமிழகத்தில் 2004 முதல் 2011ஆம் ஆண்டு வரை இயல்பு, இயல்பைவிட அதிகளவில் மழைப் பதிவாகியுள்ளது. ஆனால், 2012, 2013 ஆகிய இரு ஆண்டுகளாக இயல்பைவிட 33 சதம் குறைவாகவே மழைப் பெய்துள்ளது. இதற்கு குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், தாழ்வுப் பகுதி, புயல் போன்ற மழைப் பொழிவுக்கான பெரும்பாலான நிகழ்வுகள் ஆந்திரம் நோக்கிச் சென்றதே முக்கியக் காரணமாகும். அத்துடன், காற்றழுத்தத் தாழ்வு நிலை ஈரப் பதத்தையும் ஈர்த்துச் சென்றதால், தமிழகத்தில் வறட்சியான நிலை ஏற்பட்டது. இதனால், தமிழகத்தில் பொழிய வேண்டிய மழை ஆந்திரத்தில் மிக அதிகளவில் பெய்துள்ளது.

வங்கக் கடலில் தோன்றும் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் மன்னார் வளைகுடா பகுதியில் நுழையும்போதெல்லாம் தமிழகத்தில் நல்ல மழைப் பெய்துள்ளது. இந்த நிகழ்வு நடைபெறாத போது இயல்பைவிட மழைப் பொழிவு குறைந்துள்ளது. கணினி மூலம் அறியப்படும் தகவல்கள் 10 நாள்களுக்குத்தான் உறுதியாகத் தெரிவிக்க முடியும். மழைப் பொழிவை மேலும் துல்லியமாகக் கணிக்க காரைக்கால் பகுதியில் ரேடார் கருவியும், பல பகுதியில் மழை மானியும் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடலில் ஏற்படும் காற்றழுத்தத் தாழ்வு நிலை, காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உள்ளிட்டவை மெல்ல நகர்ந்து மழைப் பொழிவை உண்டாக்குகிறது. இந்த நிகழ்வுக்கும், புவி வெப்பமயமாதலுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றார் அவர்.

கல்லூரி முதல்வர் கே.ஏ.துரைசாமி, தீவனப் பகுப்பாய்வகத் தலைவர் நடராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் தலைவர்கள் கூட்டம்**

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் கூட்டம் பரமத்தி

வேலூர் அருகேயுள்ள பொத்தனூரில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு சேலம் ஆவின் தலைவர் சின்னுசாமி தலைமை தாங்கினார். சேலம் ஆவின் பொதுமேலாளர் ஸ்ரீதரன், நாமக்கல் பால் வள துணைப் பதிவாளர் சுப்பிரமணியம், சேலம்

ஆவின் துணை பொதுமேலாளர் பாண்டியன், விரிவாக்க அலுவலர் முத்துவேல்

உள்பட பலர்கலந்து கொண்டனர்.

**கோழிகளுக்கு தடுப்பூசி முகாம் பிப்ரவரி 3-இல் தொடக்கம்**

வெள்ளைக் கழிச்சல் நோய் தாக்கி கோழிகள் இறப்பதைத் தடுக்க இரு வார தடுப்பூசி முகாம் பிப்ரவரி 3-ஆம் தேதி தொடங்குகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கோழிகளுக்கு ஏற்படும் வெள்ளைக் கழிச்சலைக் கட்டுப்படுத்த கால்நடை பராமரிப்புத் துறை மூலம் வாரம் ஒரு முறை கால்நடை மருந்தகங்களிலும், 15 நாள்களுக்கு ஒருமுறை கால்நடை மருத்துவ கிளை நிலையங்கள், கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களில் தடுப்பூசிகள் போடப்படுகின்றன.

இருப்பினும், கோடைக் காலத்தில் இந்த நோய் தாக்குவதைத் தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கையாக இலவச தடுப்பூசி முகாம்கள் அனைத்து கிராமங்களிலும் பிப்ரவரி 3ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

பொதுமக்கள் தாங்கள் வளர்க்கும் கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் நோய் தடுப்பூசிகளைப் போட்டு பயனடையலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### "கோடையில் குறைந்த வயதுடைய நெல் ரகங்களை திருந்திய சாகுபடி முறையில் பயிரிட யோசனை

கோடையில் குறைந்த வயதுடைய நெல் ரகங்களை திருந்திய சாகுபடி முறையில் பயிரிடலாம் என்றார் புதுக்கோட்டை வட்டார வேளாண் உதவி இயக்குநர் வி.எம். ரவிச்சந்திரன்.

புதுக்கோட்டை அருகேயுள்ள சோத்துப்பாளை கிராமத்தில் வேளாண் துறை சார்பில் அண்மையில் நடைபெற்ற முன்பருவ முனைப்பு இயக்க நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து அவர் பேசியது:

கோடையில் குறைந்த வயதுடைய நெல் ரகங்களான ஆடுதுறை- 43, ஆடுதுறை-37, ஆடுதுறை (ஆர்) 45, கோ.ஆர்.எச்-3 ஆகிய ரகங்களை திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடிசெய்யலாம். ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் விதையை விதைநேர்த்தி செய்து, 40 சதுர மீட்டர் அளவில் மேட்டுப்பாத்தியில் விதைத்து 14-17 நாட்கள் வயதுடைய நாற்றுகளை துல்லியமாக சமன் செய்த நடவு வயலில் இடைவெளி குறியிடும் மாக்கர் கருவி கொண்டு 22.5ஷ்22.5 செ.மீ இடைவெளியில் இருபக்கங்களிலும் குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்ய வேண்டும்.

தண்ணீர் பாய்ச்சுவதை பாய்ச்சுதலும், காய்ச்சலும் முறையில் செய்வதே நல்லது. கோனோ வீடர் கருவியை 10 நாட்கள் இடைவெளியில் நான்கு முறை உபயோகிப்பதன் மூலம் அதிக தூர் கட்டுவதுடன் களைகளைக் கட்டுப்படுத்தமுடியும்.

இலைவண்ண அட்டையை உபயோகித்து தேவையான அளவு மட்டும் தழைச்சத்து இடவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் ஏக்கருக்கு சராசரியாக 6 மெட்ரிக் டன் மகசூல் பெறமுடியும். வரப்புப் பயிராக பாசிப்பயறு, தட்டைபயறு போன்றவற்றை பயிரிடும்போது நெற்பயிரை தாக்கும் பூச்சி நோய்களை கட்டுப்படுத்துவதுடன் உபரி வருமானமும், கால்நடைத் தீவனமும் கிடைக்கும் என்றார் அவர்.

தொடர்ந்து, கோடைப்பருவத்தில் பூச்சிநோய் எதிர்ப்புத் திறன் கொண்ட வம்பன்-4, வம்பன்-5, வம்பன்-6 உளுந்து ரகங்களையும், கோ.ஆர்.ஜி-7, வம்பன் 3 ஆகிய துவரை ரகங்களையும், ஆடுதுறை-3, வம்பன்- 3 பாசிப்பயறு ரகங்களையும் பயிரிடலாம் என வேளாண் அலுவலர் பூபதிகண்ணன் யோசனை தெரிவித்தார்.

விதைஆய்வு அலுவலர் பாண்டி, மக்காச்சோளம் சாகுபடியில் உயர் விளச்சல் ரகங்களான கே-1, கே-2, கோ.எச் (எம்) 4, கோ (எம்) -5 போன்ற ரகங்களைப் பயன்படுத்தி லாபம் பெறலாம். இதுகுறித்த தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை பெற புதுக்கோட்டை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தையும், வேளாண்மை உதவி அலுவலர்களையும் அணுகலாம் என்றார்.

### பயறுவகை பயிர்களுக்கான சாகுபடி முனைப்பு இயக்கம்

பேராவூரணி வேளாண் கோட்டம் சார்பில் எண்ணெய் வித்து பயிர்களுக்கான விதைக் கிராம திட்டத்தின் கீழ் பயறுவகை பயிர்களுக்கான சாகுபடி முனைப்பு இயக்கம் ஆதனூரில் புதன்கிழமை நடைபெற்றது.

பேராவூரணி ஒன்றியக் குழுத் தலைவர் சாந்தி அசோக்குமார் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் வேளாண்மை துணை இயக்குநர் மத்திய திட்டம் ஜி. ராமதாஸ், வேளாண் துணை இயக்குநர் டி. சொக்கலிங்கம், சாக்கோட்டை உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் ஆர். கிருஷ்ணகுமார், வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலைய இணைப் பேராசிரியர் ராஜமாணிக்கம், வேளாண் அலுவலர் கா. முருகேசன் உள்ளிட்டோர் பயறுவகை சாகுபடி தொழில்நுட்பங்கள், மானிய விவரங்கள் குறித்துப் பேசினர். நிகழ்ச்சியில் பெரியஏரி, வேம்பன்குளம் நீரைப் பயன்படுத்துவோர் பாசனதாரர் சங்கத் தலைவர் வேத. குஞ்சருளன் பெரியஏரி, வேம்பன்குளத்தை சர்வே செய்து புறக்கரை அமைத்து அகலப்படுத்தித் தூர்வார வேண்டும் என மாவட்ட ஆட்சியரின் வேளாண்மை துறை நேர்முக உதவியாளர் சொக்கலிங்கத்திடம் மனு அளித்தார்.

ஆதனூர் மற்றும் சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண் உதவி இயக்குநர் எஸ். ஈஸ்வர் நன்றி கூறினார்.

### பயிர் காப்பீட்டுத் தொகை ரூ. 12.05 கோடி பெறப்பட்டுள்ளது

தஞ்சாவூர் மாவட்டத்தில் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பயிர் காப்பீட்டுத் தொகை ரூ. 12.05 கோடி பெறப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பது:

மாவட்டத்தில் 2012 - 13-ல் சம்பா நெல் சாகுபடி செய்த பயிர்க்கடன் பெற்ற, பயிர்க் கடன் பெறாத விவசாயிகள் அந்தந்தப் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயிர் காப்பீடு செய்தனர்.

இதில், மாவட்டத்தில் திருவையாறு, கண்டியூர், நடுக்காவிரி, பெரமூர், செங்கிப்பட்டி, சில்லத்தூர், தம்பிக்கோட்டை, ஆண்டிக்காடு, அதிராம்பட்டினம், ஆவணம், குருவிக்கரம்பை, பேராவூரணி, பெரியக்கோட்டை, பெருமகளூர், அம்மாபேட்டை, மெலட்டூர், கபிஸ்தலம், பாபநாசம், அய்யம்பேட்டை ஆகிய 19 வருவாய் சரகங்களுக்கு மட்டும் பயிர் காப்பீடு இழப்பீட்டுத் தொகையாக ரூ. 12.05 கோடி காப்பீடு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது.

இந்த வருவாய் சரகங்களில் உள்ள பயிர் காப்பீடு இழப்பீட்டுத் தொகை வரப்பெற்ற அதே பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக வறட்சி நிவாரணம் வழங்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து வறட்சி நிவாரணத் தொகை பிடித்தம் செய்யப்பட்டு, நிலுவைத் தொகை வழங்கப்படுகிறது. வறட்சி  நிவாரணம் வழங்கப்படாத விவசாயிகளுக்குப் பெறப்பட்ட பயிர்க் காப்பீடு இழப்பு முழுத் தொகையும் பட்டுவாடா செய்யப்படுகிறது.  தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை அணுகி தங்களுக்குரிய பயிர் காப்பீடு இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

### இயற்கை வேளாண்மை கருத்தரங்கு

இயற்கை முறையில் விவசாயம் செய்வது தொடர்பான கருத்தரங்கம் செஞ்சியில் புதன்கிழமை நடைபெற்றது. ராயல் அக்ரோ மற்றும் டெய்ரி லிமிடெட் நிறுவனத்தின் மக்கள் தொடர்பு அலுவலர் பாபு சிறப்பு விருந்தினராக பங்கேற்று, இயற்கை விவசாயத்தின் சிறப்புகள் குறித்து விளக்கினார். மண்டல மேலாளர் ஏ.பி.நாகராஜ், குழு மேலாளர் கேசவன் ஆகியோர் இயற்கை விவசாய முறைகள் குறித்துப் பேசினர். நிறுவனத்தின இயக்குநர் தியாகராஜன், காணொளி காட்சி மூலம் இயற்கை விவசாயிகளுக்கு காப்பீட்டுடன் கூடிய இலவச இயற்கை உரம், பூச்சிக் கொல்லி மருந்து, இலவச மண் பரிசோதனை ஆகியவை செய்து தரப்படும் எனக் கூறினார். மேலும் சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து முதிர்வு அடைந்த 17 பயனாளிகளுக்கு மக்கள் தொடர்பு அலுவலர் பாபு ரூ 2.80 லட்சத்தை வழங்கினார்.

### வறண்ட கோமுகி அணையில் பயிர் சாகுபடி!

கோமுகி அணையில் தண்ணீர் வறண்டதால் சிலர் வெள்ளரி, கம்பு, சோலம் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். சின்னசேலம் வட்டத்தைச் சேர்ந்த கச்சிராயப்பாளையம் அருகே கோமுகி அணை உள்ளது. கல்வராயன் மலையின் அடிவாரத்தில் உள்ள இவ்வணையின் நீர்மட்டம் 42 அடியாகும். நீர் பிடிப்புப் பகுதி 360 ஹெக்டேர். அணைக்கு 113 சதுர மைல் பரப்பிலிருந்து நீர்வரத்து உள்ளது. ஆண்டு தோறும் ஆகஸ்ட் மாதத்தில் அணை நிரம்பும். அக்டோபரில் பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்படும். சுமார் 3 மாதம் வரை அணையில் தண்ணீர் இருக்கும். இதில் மீன் வளத் துறையினர் கட்லா, ரோகு போன்ற மீன்களை வளர்த்து விற்பனை செய்வார்கள். அணையில் தண்ணீர் வற்றியவுடன் நீர்பிடிப்புப் பகுதியில் விவசாயிகள் ஏர் ஓட்டி பயிர் செய்வது வழக்கம். அணையில் பயிர் செய்வதால் பயிர் செழிப்பாக வளர்ந்து நல்ல விளைச்சல் கிடைக்கும். வெள்ளரியைத்தான் அதிக அளவில் பயிர் செய்வார்கள். ஆடு, மாடுகளுக்காக கம்பு, சோளம் பயிர் செய்வார்கள். இந்த ஆண்டும் நீர்வரத்து குறைந்து அணை வற்றிவிட்டதால் அப்பகுதி மக்கள் வெள்ளரியை நடவு செய்துள்ளனர். செழிப்பான மண் என்பதால் உரச் செலவும் மிச்சம். விவசாயிகளுக்கு நல்ல லாபமும் கிடைத்து வருகிறது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பாசிப்பருப்பு, பயிறு விலை ரூ.2,100 வரை உயர்வு



**சென்னை**:தமிழகத்தில், கடந்த ஆண்டு, எதிர்பார்த்த அளவு, மழை இல்லாததால், பாசிப்பயிறு விளைச்சலில், கடும் பாதிப்பு ஏற்பட்டது. இதனால், தமிழகத்திற்கு, பருப்புகளை, மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான் உள்ளிட்ட வடமாநிலங்களும், கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட தென் மாநிலங்களும், வழங்கி வந்தன.

இந்த மாநிலங்களில், நடப்பாண்டு, அறுவடையில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், தமிழகத்துக்கான, பருப்பு வகைகளின் வரத்து நிறுத்தப்பட்டுள்ளது. இதையறிந்து, பெரிய வியாபாரிகள், அதிக அளவில், பாசிப்பயிறு மற்றும் பாசி பருப்பை, பதுக்க துவங்கியுள்ளனர்.தமிழகத்தின் பெரிய மார்க்கெட்டுகளான, சென்னை, சேலம், விருதுநகர் ஆகிய இடங்களில், பயிறு, பாசிப்பருப்புக்கு, கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது; இதனால், அவற்றின் விலை, உயர்ந்தது.கடந்த வாரம், பாசி பருப்பு, மொத்த விலையில், முதல் ரகம், குவிண்டால், 8,800 ரூபாயில் இருந்து, 10,300 ரூபாயாகவும், இரண்டாம் ரகம், குவிண்டால், 8,500 ரூபாயில் இருந்து, 10 ஆயிரம் ரூபாயாகவும், பாசிப்பயிறு, குவிண்டால், 8,200ல் இருந்து, 9,800 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.நேற்று, பாசிப்பருப்பு விலை, குவிண்டாலுக்கு, 600 ரூபாய் வரை மேலும் உயர்ந்துள்ளது. முதல் ரகம் குவிண்டால், 10,900 ரூபாய்க்கும், 2ம் ரகம் குவிண்டால், 10,600 ரூபாயாகவும், பாசிப்பயிறு

குவிண்டால், 10,200 ரூபாயாக உயர்ந்துள்ளது.சில்லரை விலையில், கிலோ, முதல் ரகம், 114 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 110 ரூபாய்க்கும், பாசிப்பயிறு, கிலோ, 104 ரூபாய்க்கு விற்கிறது. பாசிப்பருப்பின் விலை, ஒரே வாரத்தில், குவிண்டா-லுக்கு, 2,100 ரூபாய் வரையிலும், கிலோவுக்கு, 25 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்துள்ளது.

## தண்ணீர் சிக்கனம்: அதிக வருவாய் நவீன கரும்பு சாகுபடியின் மகிமை : ?கருத்தரங்கில் தகவல்

**அலங்காநல்லூர்**:'கரும்பில் நவீன தொழில்நுட்பத்தை கடைபிடித்தால், 40 சதவீத தண்ணீர் மிச்சமாவதுடன், வருவாயும் இருமடங்கு அதிகரிக்கும்,' என, அலங்காநல்லூர் பி.மேட்டுப்பட்டியில், 'கரும்பு சாகுபடியில் நீர்ச்சிக்கன மேலாண்மை' கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.அட்மா திட்டத்தின் கீழ் நடந்த கருத்தரங்கிற்கு விவசாய இணை இயக்குனர் ஜெயசிங்ஞானதுரை முன்னிலை வகித்தார். துணை இயக்குனர் கனகராஜ் வரவேற்றார். துணை இயக்குனர் சாரநாத்பாபு, உதவி இயக்குனர்கள் லட்சுமணன், வளர்மதி, அலுவலர் ஸ்ரீதர் பங்கேற்றனர்.கலெக்டர் சுப்ரமணியன் தலைமை வகித்து பேசியதாவது: இன்று தண்ணீர் பற்றாக்குறை உள்ளதால், சொட்டு நீர்ப்பாசனத்தை கடைபிடிக்க வேண்டும். ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில், வறட்சியில் கைகொடுக்கும் பண்ணை குட்டைகள் இலவசமாக அமைக்கப்படுகின்றன. இதற்கு குறைந்தளவு விவசாயிகள் மனு தந்துள்ளனர், என்றார்.விவசாய அறிவியல் மைய விஞ்ஞானிகள் குருசாமி, சீனிவாசன், 'நவீன கரும்பு சாகுபடி' தலைப்பில் பேசியதாவது: சாதாரண நடவுக்கு இருபக்க கரணையை பயன்படுத்துவதால், ஏக்கருக்கு 3 டன் கரும்பு தேவை. நவீன சாகுபடியில் நாற்றுக்கள் பயன்படுத்துவதால் 5 ஆயிரம் கன்றுகள் போதும். இம்முறையில் சொட்டு நீர்ப்பாசனத்துடன் உரக்கரைசலை அளிப்பதால், 40 சதவீத நீர்ச்சிக்கனத்துடன், உரத்தின் முழுப்பலனும் கிடைக்கும். கரும்புகள் சீராக வளரும்.நாற்று சரியாக வளராவிட்டால், புதிய நாற்றுக்களை எளிதாக நட்டு, 100 சதவீத வளர்ச்சி காணலாம். இதனால் 98 டன் கிடைத்த ஒரு ஏக்கரில், 200 டன் மகசூல் கிடைக்கும். வருமானம் இரட்டிப்பாகும், என்றனர்.

## பண்ருட்டி மார்க்கெட் கமிட்டியில் உளுந்து மூட்டைகள் வரத்து அதிகரிப்பு

**பண்ருட்டி** :பண்ருட்டி மார்க்கெட் கமிட்டியில் 30 ஆண்டுகளில் கடந்த ஒரு வாரமாக உளுந்து வரத்து அதிகரித்துள்ளதால் விவசாயிகள் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பண்ருட்டி மார்க்கெட் கமிட்டியில் உளுந்து அதிகபட்சமாக 300 மூட்டைகள் அளவிலேயே விற்பனைக்கு வருவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு பண்ருட்டி, உளுந்தூர்பேட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து நேற்று 1,500 மூட்டை நெல், 1,500 மூட்டை உளுந்து, பச்சைபயிர் 20 மூட்டை, பருத்தி 300 மூட்டைகளும், கம்பு 9 மூட்டைகளும் விற்பனைக்கு வந்தன.

இதில் 75 கிலோ எடை கொண்ட பி.பி.டி., ரக நெல் 1,030 ரூபாய் முதல் 1,100 வரையும், பொன்மணி குண்டு ரகம் 880 முதல் 950 ரூபாய் வரையும் விற்றன. 100 கிலோ எடை கொண்ட உளுந்து 4,737 முதல் 4,816 ரூபாய் வரை விற்றன.

பச்சைபயிர் 5,650 ரூபாய்க்கும், பருத்தி குவிண்டால் 4,850, ராகி 1,606, கம்பு 1,441 ரூபாய்க்கும் விற்பனையானது.

இதில் பச்சைபயிர் கடந்த வாரம் 6,800லிருந்து தற்போது மூட்டைக்கு 1,150 ரூபாய் குறைந்துள்ளது. மார்க்கெட் கமிட்டியில் நேற்று போதிய ஊழியர்கள் இல்லாததால் விலை நிர்ணயம், விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்வதில் காலதாமதம் ஏற்பட்டதால் காலை 10:00 மணிக்குப் பிறகு வந்த விவசாய பொருட்கள் வரும் 2ம் தேதிக்குப் பிறகே அனுமதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

## மாங்காய் விலை குறைவு நேரடி விற்பனையில் விவசாயிகள்

**கம்மாபுரம்**:கம்மாபுரம் பகுதியில் மாங்காய் விளைச்சல் அமோகமாக உள்ள நிலையில், விலை குறைவால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கம்மாபுரம் அடுத்த முதனை, இருப்புகுறிச்சி, இருளக்குறிச்சி, தெற்கிருப்பு, வடக்கிருப்பு, கிழக்கிருப்பு, மேற்கியிருப்பு, ஊ.அகரம், பெரியகாப்பாங்குளம், சின்னகாப்பாங்குளம் வி.சாத்தமங்கலம் உட்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் அதிகளவு முந்திரி, மா, பலா பயிர் செய்திருந்தனர்.

கடந்த 2011ல் வீசிய "தானே' புயலில் முந்திரி, மா, பலா மரங்கள் கடுமையாக சேதமடைந்தன. இதனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக மாங்காய் விளைச்சல் குறைந்து விவசாயிகள் பாதித்தனர். இந்நிலையில், இந்தாண்டு மாங்காய் விளைச்சல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். அதிக விளைச்சல் காரணமாக, கிலோ மாங்காய் 5 முதல் 10 ரூபாய் வரை குறைந்த விலைக்கு வியாபாரிகள் கொள்முதல் செய்வதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.இடக்குப்பம் விவசாயி கருப்பன் கூறுகையில், "தானே' புயலில் எனது தோப்பில் ஏராளமான மா மரங்கள் சேதமடைந்தன. மீதமுள்ள மரங்களில் மாங்காய் காய்ப்பு அதிகமாக உள்ளது. ஆனால் வியாபாரிகள் 5 முதல் 10 ரூபாய் வரை மட்டுமே கொள்முதல் செய்வதால், விவசாயிகளே நேரடியாக அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று, கிலோ மாங்காய் 10 முதல் 13 ரூபாய் வரை விற்கிறோம்' என்றார்.

## ராஜாக்கமங்கலம் துறையில் ஆமை குஞ்சுகள் பொரிப்பகம்

**நாகர்கோவில்** : குமரியில் ஆமைகளை பாதுகாக்கும் வகையில் ராஜாக்கமங்கலம் துறையில் ஆமைக் குஞ்சுகள் பொரிப்பகம் வனத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ளது. குமரியை பெறுத்தவரை ராஜாக்கமங்கலம் கடற்கரை பகுதியில் ஆமைகள் காலம் காலமாக முட்டைகள் இட்டு குஞ்சு பொரிக்கின்றன. பொதுவாக ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை ஆமைகளின் இனப்பெருக்க காலமாகும். எனவே ராஜாக்கமங்கலம்துறையில் ஆமைகளை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ள இன்டாக் மாவட்ட அமைப்பாளர் லால்மோகன் ஏற்கனவே கோரிக்கை மனு அளித்திருந்தார். இந்தநிலையில் மாவட்ட வனத்துறை அலுவலர் ரிட்டோ சிரியாக் மற்றும் மாவட்ட உதவி அலுவலர் கோபால்தாஸ் ஆகியோர் ஆமைகளை பாதுகாக்க தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இதன்படி ஆமைகளை பாதுகாப்பதன் அவசியம் பற்றியும். மீனவர்களுக்கு அதன் நன்மைகள் பற்றியும் கிராமங்கள் வாரியாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. கிறிஸ்தவ தேவாலயங்களில் பாதிரியார்கள் மூலம் ஆமைகளை பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றியும், வேட்டையாடுவது பெருங்குற்றம் எனவும் அறிவிக்கப்பட்டு வருகிறது. ஆமைகளை பாதுகாக்க பல்வேறு

நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். பொதுமக்களும் ஆமைகள் மற்றும் அதன் முட்டைகளை வேட்டையாடுவது பற்றி தெரிந்தால் 94454-68537, 68538, 68539, 68541, 68543, 68544 ஆகிய எண்களில் ஏதாவது ஒன்றில் தகவல் தெரிவிக்கலாம் என்று மாவட்ட வன அலுவலர் தெரிவித்தார்.

## அலை தடுப்பு சுவர் அமைக்கும் பணி தீவிரம்

**நாகர்கோவில்** : கன்னியாகுமரி அருகே உள்ள சின்னமுட்டத்தில் 350-க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன் பிடி தொழில் ஈடுபட்டு வருகின்றன. தினமும் காலை 5 மணிக்கு கடலுக்கு மீன்பிடிக்க சென்று விட்டு இரவு 9 மணிக்கு மீனவர்கள் கரைக்கு திரும்புவார்கள். தற்போது இந்த துறைமுகத்தில் படகுகள் நிறுத்துவதற்கு இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதைதொடர்ந்து துறைமுகம் விரிவாக்க பணிகளுக்காக தமிழக அரசு ரூ.7.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உள்ளது. இந்தநிலையில் சின்னமுட்டம் துறைமுகத்தின் மேற்கு பகுதியில் முதல் கட்டமாக ரூ.33 கோடி செலவில், 430 மீட்டர் நீள மேற்கு அலை தடுப்புசுவர் அமைக்கும் பணி நடந்து வருகிறது. தற்போது ரூ.22 கோடி செலவில் 100 மீட்டர் நீளத்திற்கு மேற்கு அலை தடுப்பு சுவர் நீட்டிக்கும் பணி நடந்து வருகிறது. இதற்கிடையே துறைமுகத்தின் கிழக்கு பகுதியில் ரூ.18 கோடி செலவில் 500 காங்கிரீட் சிமெண்ட் பிளாக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதில் தற்போது 400 மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் கட்டைகள் அலை தடுப்பு சுவரின் மீது அமைக்கும் பணி நடந்து வருகிறத. இதுவரை 300 சிமெண்ட் கட்டைகள் அலைதடுப்புசுவரின் மீது பொருத்தப்பட்டுள்ளது. இந்த பணி அனைத்தும் வருகிற மார்ச் மாத இறுதியில் முடிவடையும் என்றும், அதன்பிறகு கூடுதலாக 160 படகுகள் நிறுத்துவதற்கு வாய்ப்பு உள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். முதல் கட்ட பணிகளை தூத்துக்குடி மீன்வளத்துறை சுனாமி திட்ட அலகு உதவிசெயற் பொறியாளர் கங்காதரன், உதவி பொறியாளர் ஆகியோர் பார்வையிட்டனர்.

## துவரை நாற்றங்கால் குறித்து பயிற்சி

**ராசிபுரம்**: அக்கரைப்பட்டி கிராமத்தில், துவரை நாற்றங்கால் குறித்த, பண்ணைப் பள்ளி பயிற்சி, அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

வெண்ணந்தூர் அடுத்த அக்கரைப்பட்டி கிராமத்தில், வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் கீழ், துவரை நாற்றாங்கால் பண்ணைப் பள்ளி பயிற்சி நடந்தது.

இடுபொருட்கள் வழங்கல், மண் மாதிரி எடுத்தல், விதை கடினப்படுத்துதல், நாற்றாங்காலில் வறட்சியை தாங்கும் தொழில்நுட்பம், விதை நேர்த்தி செயல் விளக்கம், நாற்றங்கால் தயார் செய்தல் போன்ற தொழில்நுட்ப செயல் விளக்கங்கள் செய்து காட்டப்பட்டது.

வெண்ணந்தூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் சீனிவாசன், அக்கரைப்பட்டி பஞ்சாயத்து தலைவர் ராஜேந்திரன், வேளாண் அலுவலர் வசுமதி, உதவி அலுவலர்கள் ஆரோக்கியசாமி, சக்திவேல், திட்ட அலுவலர்கள் ரமேஷ், ஜமுனாராணி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## உணவு பதப்படுத்துதல் பயிற்சி

**அருப்புக்கோட்டை**: அருப்புக்கோட்டை அருகே கோவிலாங்குளம் ஆராய்ச்சி நிலையத்தில், 1மாத இலவச உணவு பதப்படுத்துதல் பயிற்சி ,துவக்க விழா நடந்தது.

சிறு தானிய உணவுகள் பழம் மற்றும் காய்கறியில் மதிப்பு கூட்டிய பொருட்களான ஜாம், ஜெல்லி, ஜூஸ் மற்றும் பால் பொருட்கள் செய்து, பதப்படுத்துதல் பற்றி, பல்வேறு தொழில் பயிற்சி வல்லுனர்கள் பயிற்சி அளித்தனர். மதுரை மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் புஸ்பம் துவக்கி வைத்தார். இணை இயக்குனர் (ஆத்மா) செண்பகராஜ், இணை இயக்குனர்கள் முத்து முனியாண்டி (விற்பனை), செயலர் முருகேசன் பேசினர். நிகழ்ச்சியை உதவி பேராசிரியர் முத்துராமு தொகுத்து வழங்கினார். ஏற்பாடுகளை, மண்டல ஆராய்ச்சி மற்றும் வேளாண் அறிவியல் நிலைய அலுவலர்கள் செய்தனர். உதவி பேராசிரியர் வீரணன் அருண் கிரிதாரி நன்றி கூறினார்.

## விதைகிழங்கை உணவாக்கிய யானை கூட்டத்தால் நஷ்டம்

**மஞ்சூர்** : மஞ்சூர் அருகே கிழங்கு தோட்டத்தில் வைக்கப்பட்ட 120 மூட்டை, கிழங்கு விதைகளை யானைகள் தின்று தீர்த்தன.

மஞ்சூர் அடுத்துள்ள முள்ளிகூர் கிராமத்தையொட்டி சிலர் மலை காய்கறி விவசாயம் செய்து வருகின்றனர். நேற்று முன்தினம் இரவு 7:00 மணியளவில் மூன்று காட்டு யானைகள் முனியாண்டி தோட்டம் பக்கம் வந்தன. மலை காய்கறி தோட்டத்தில் அமைக்கப்பட்ட குடிலில் முனியாண்டி மனைவி சின்னத்தாயும், உறவினர் முனியம்மாளும் தங்கியிருந்தனர். அங்கிருந்த 120 கிழங்கு விதை மூட்டைகளை துவம்சம் செய்த யானைகள், பெரும்பாலானவற்றை தின்று தீர்த்துள்ளன. அதிகாலை 5:00 மணியளவில் யானை கூட்டம் மலை காய்கறி தோட்டத்திலிருந்து வெளியேறியுள்ளது. இது குறித்து சின்னத்தாய் கூறுகையில், ""எங்கள் தோட்டத்தில், அறுவடைக்கு தயாராக இருந்த காரட் மற்றும் விதை கிழங்குகளை யானை தின்றும், சேதப்படுத்தியதால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது,"என்றார்.

## புவியியல் ஆய்வு மூலம் நீரோட்டம் : கண்டறியும் பணி: கலெக்டர் தகவல்

**திண்டுக்கல்,**: ""திண்டுக்கல் மாவட்டத்தில், புவியியல் ஆய்வு மூலம் நீரோட்டம் கண்டறியும் பணி நடந்து வருகிறது" என, கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்தார். குடிநீர் திட்ட பணிகள் முன்னேற்றம் குறித்த ஆய்வு கூட்டம் திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. ஊராக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் பாண்டியாஜன் முன்னிலை வகித்தார்.

கலெக்டர் வெங்கடாசலம் கூறியதாவது: வறட்சியால், மாவட்டத்தில் நீர்மட்டம் குறைந்து வருகிறது. நீரோட்டம் அறிந்து ஆழ்துளை கிணறுகள் அமைப்பதன் மூலம் பொருள் செலவு, காலவிரயம் தவிர்க்கப்படுகிறது. மாவட்டத்தில், புவியியல் ஆய்வு மூலம் நீரோட்டம் கண்டறியப்பட்டு வருகிறது. நீர் பற்றாக்குறை ஏற்படுவதற்கு முன்பாக, புவியியல் ஆய்வினை விரைந்து முடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதே÷பால், வேளாண்மைத்துறையில் நீர் ஆதாரம்

அறியப்பட உள்ளது. இதன்மூலம் பயிர் சாகுபடி செய்வதற்கு விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். மாவட்டம் முழுமைக்கும் நீர்சிக்கனம், நீர் பாதுகாப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்பட உள்ளது, என்றார். மத்திய நீர்வள ஆதார அமைப்பின் விஞ்ஞானி குமரேசன், ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை விரிவாக்க அலுவலர் பிரிட்டோராஜ் மற்றும் நகராட்சி கமிஷனர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ÷ பரூராட்சி செயல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஒரு கிராமத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு : ஒரு மாவட்டத்திற்கு 5 கிராமங்கள் தேர்வு

**தேனி**,:தோட்டக்கலைத்துறையில் அனைத்து தொழில்நுட்பங்கள், அனைத்து மானியங்களையும் முழுமையாக பயன்படுத்தி, முழு அளவில் வளர்ச்சி பெற்ற மாதிரி கிராமங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. முதற் கட்டமாக இத் திட்டம் திருவள்ளூர், வேலூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோவை, நீலகிரி, திருச்சி, பெரம்பலூர், மதுரை, தேனி, திண்டுக்கல், ராமநாதபுரம், நெல்லை ஆகிய 15 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஐந்து கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.ஒவ்வொரு கிராமத்திலும், அனைத்து தோட்டக்கலை பயனாளிகளையும் தேர்வு செய்து அவர்களுக்கு மூன்று ஆண்டுகளில் தோட்டக்கலைத்துறை சார்பில் ஒரு கோடி ரூபாய் அளவில் மானிய திட்டங்களையும், தொழில் நுட்பங்களையும் வழங்கி நவீன சாகுபடி முறைகள் கற்றுத்தரப்பட உள்ளது.

மொத்தத்தில், அந்த கிராமத்தையே மாவட்டத்தின் மாதிரி கிராமமாக மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு மாதிரி கிராமத்திற்கும் ஒரு தோட்டக்கலை உதவி அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மூலமே இந்த கிராமத்தில் பயனாளிகள் தேர்வு, நலத்திட்ட உதவிகள் வழங்கல், மானிய உதவிகள் வழங்கல், தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கல் உட்பட எல்லா நடவடிக்கைகளும் ÷மற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**குவிண்டால் ரூ.6,489க்கு விற்பனை : மஞ்சள் விலை அதிகரிப்பு**



]ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், கர்நாடகத்தில் இருந்து மஞ்சள் விற்பனைக்கு கொண்டுவரப்படப்படுகிறது. விவசாயிகள் கொண்டு வரும் மஞ்சளின் தரத்தை பார்த்து விலை நிர்ணயம் செய்து அதிக விலை கோரும் வியாபாரிகளுக்கு மஞ்சள் விற்கப்படுகிறது. கடந்த டிசம்பர் வரையில் ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ.6 ஆயிரத்துக்கும் குறைவாகவே விற்றது. அவ்வப்போது ரூ.100 முதல் ரூ.200 வரை விலை ஏற்றம், இறக்கம் இருந்தது. தற்போது கர்நாடகாவில் இருந்து புதுமஞ்சள் குறைந்த அளவிலேயே சந்தைக்கு வருவதால் அதன் விலை உயர்ந்து வருகிறது. இதுகுறித்து ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் கூறுகையில், 'தற்போது, கர்நாடகத்தில் மஞ்சள் அறுவடை சீசன் தொடங்கியுள்ளது. இங்கு புதுமஞ்சள் சீசன் துவங்கினால் தினமும் 40 முதல் 50 லோடு லாரிகளில் மஞ்சள் வரத்து இருக்கும். இந்நிலையில், கர்நாடகத்தில் சில பகுதிகளில் கடும் வறட்சியால் மஞ்சள் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்த முறை குறைந்த அளவே மஞ்சள் வருகிறது.

இதேபோல் ஆந்திராவிலும் வறட்சி காரணமாக மஞ்சள் விளைச்சல் கிட்டத்தட்ட 30 முதல் 40 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலும் குறிப்பிட்ட சதவீதம் மஞ்சள் விளைச்சல் பொய்த்து விட்டது. எனவே இந்த முறை மார்க்கெட்டிற்கு புதுமஞ்சள் வரத்து மிக குறைவாக இருக்கும். விவசாயிகள் இருப்பு வைத்துள்ள மஞ்சளுக்கு ஓரளவு விலை கிடைக்கும்' என்றனர். நேற்று ஈரோடு அரசு ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் விற்பனையான விரலி மஞ்சள் அதிகபட்சமாக குவிண்டால் ரூ.6,489க்கும், கிழங்கு மஞ்சள் ரூ.6,319க்கும், வெளிமார்க்கெட்டில் அதிகபட்சமாக விரலி குவிண்டால் ரூ.6,485க்கும், கிழங்கு மஞ்சள் ரூ.6,403க்கும் விலை போனது.

**தேயிலை தூள் கிலோ ரூ.2 உயர்வு**



குன்னூர்: குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை மையத்தில் இந்தாண்டுக்கான 5வது ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் மொத்தம் 4,47,365 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. அதில் இலை ரகம் 3,86,943 கிலோவும், டஸ்ட் ரகம் 1 ,60,422 கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றதால் 85 சதவீத தேயிலை தூள் விற்பனையானதுடன் அனைத்து ரகத்திற்கும் ரூ.2 விலை உயர்ந்தது.

**மரவள்ளி கிழங்கு விலை சரிவு**

பரமத்திவேலூர், : பரமத்திவேலூர் மார்க்கெட்டில், மரவள்ளி கிழங்கு விலை சரிந்துள்ளது. நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் அருகே சோழசிராமணி,

கபிலர்மலை, சின்ன சோழிபாளையம், மோகனூர் ஒன்றியம் உள்ளிட்ட பகுதிகளில் மரவள்ளி சாகுபடி அதிகளவில் செய்யப்படுகிறது. இதை அறுவடை செய்து அப்பகுதி விவசாயிகள் கிழங்கு அரவை மில், ஜவ்வரிசி மில்களுக்கு விற்பனை செய்கின்றனர். இதை ஆத்தூர், சேலம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட பகுதியை சேர்ந்த வியாபாரிகள், புரோக்கர்கள் வாங்கி செல்கின்றனர்.

கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரம் மரவள்ளி கிழங்கு விலை குறைந்துள்ளது. கடந்த வாரம் ஒரு டன் ரூ11 ஆயிரத்துக்கு விலை போனது. இந்த வாரம் மரவள்ளி கிழங்கு முதல் ரகம் ஒரு டன் ரூ10 ஆயிரத்திற்கும், 2வது ரகம் ரூ9 ஆயிரத்திற்கும் விற்பனையானது. தொடர்ந்து 2 வாரமாக மரவள்ளி கிழங்கு விலை குறைந்துள்ளதால், வரும் நாட்களில் விலை உயருமென விவசாயிகள் தெரிவித்தனர்.

**மொரப்பூர் அருகே சூடு பிடித்திருக்கும் வைக்கோல் விற்பனை**

அரூர், : மொரப்பூர் அருகே மந்தநிலையில் இருந்த வைக்கோல் விற்பனை சூடு பிடிக்கத் துவங்கியுள்ளது. இதனால், வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மொரப்பூர் அடுத்துள்ள ஒடசல்பட்டி கூட்டுரோட்டில் கால்நடைகளுக்கு தேவையான வைக்கோல்களை வியாபாரிகள் வாங்கி வைத்து, விற்பனை செய்து வருகின்றனர். கடந்த சில நாட்களாக வைக்கோல் விற்பனை மந்தமாகவே காணப்பட்டது. இந்நிலையில், வைக்கோல் விற்பனை நேற்று முதல் மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

பாண்டிச்சேரி, விழுப்புரம், செய்யாறு, திருக்கோவிலூர் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகளிடமிருந்து ஒரு மினிடோர் வைக்கோல் ரூ3 ஆயிரத்திலிருந்து ரூ3,200 வரையும், டெம்போ வைக்கோல் ரூ7 ஆயிரத்துக்கும் வியாபாரிகள் வாங்கி வருகின்றனர். இதற்காக, டெம்போ மற்றும் மினிடோர் ஒன்றுக்கு புரோக்கர் கமிஷன் ரூ200 வழங்கப்படுகிறது. தர்மபுரி, காவேரிப்பட்டணம், காரிமங்கலம்,

தொப்பூர், நல்லம்பள்ளி, இருமத்தூர், பாலக்கோடு, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கொண்டு சென்று மினிடோர் வைக்கோல் ரூ6000 முதல் ரூ6,500 வரையும், டெம்போ வைக்கோல் ரூ9 ஆயிரத்திலிருந்து ரூ11 ஆயிரம் வரையும் விற்பனை செய்கின்றனர். கடந்த 3 மாதங்களுக்கு முன்பு இப்பகுதியில் சுமாரான மழை பெய்ததால் வைக்கோல் விற்பனை மந்தமாக காணப்பட்டது. தற்போது நெல் அறுவடை பணி துவங்கியுள்ளதால் வைக்கோல் விற்பனை தற்போது, மீண்டும் சூடுபிடிக்க துவங்கியுள்ளது.

### பரமத்திவேலூர் மார்க்கெட்டில் வாழைத்தார் விலை தொடர்ந்து அதிகரிப்பு

பரமத்திவேலூர், : பரமத்திவேலூரில் தொடர்ந்து வாழைத்தார் விலை அதிகரித்து வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர், பாண்டமங்கலம், பொத்தனூர், நன்செய் இடை யாறு, பொய்யேரி, பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. இங்கு விளையும் வாழத்தார்களை பரமத்திவேலூரில் தினசரி வாழை மார்க்கெட்டுக்கு கொண்டு வந்து ஏலம் விடப்படுகிறது.
இதை ஏலம் எடுக்க பழனி, ஒட்டன்சத்திரம், மதுரை, திண்டுக்கல், சேலம், நாமக்கல், ஈரோடு மற்றும் கோவை உட்பட பல்வேறு ஊர்களில் இருந்து வியாபாரிகள் வருகின்றனர். கடந்த வாரம் நடந்த ஏலத்தில் பூவன் தார் ரூ500, ரஸ்தாளி ரூ400, பச்சநாடன் ரூ 500, கற்பூரவல்லி ரூ450, மொந்தன் ரூ700 என ஏலம் போனது. நேற்று பூவன் தார் ரூ600, ரஸ்தாளி ரூ500, பச்சநாடன் ரூ600, கற்பூரவல்லி ரூ500 மற்றும் மொந்தன் தார் ரூ800 என விற்பனையானது.
தொடர்ந்து சில வாரங்களாக வாழைத்தார் விலை அதிகரித்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

### வரத்து அதிகரிப்பால் உருளைக்கிழங்கு விலை தொடர் சரிவு

சேலம், : உருளைக்கிழங்கு வரத்து அதிகரிப்பால் கடந்த ஒரு வாரத்தில் கிலோவிற்கு ரூ5 வரை குறைந்துள்ளது.
ஊட்டி, ஓசூர், பெங்களூர், ஆக்ரா ஆகிய இடங்களில் உருளைக்கிழங்கு

அதிகளவில் விளைகிறது. இங்கிருந்து தினமும் லாரிகள் மூலம் சேலம் மார்க்கெட்டிற்கு உருளைக்கிழங்கு விற்பனைக்கு வருகிறது. விளைச்சல் அதிகரிப்பால் தற்போது மார்க்கெட்டிற்கு தலா 50 கிலோ கொண்ட 1600 மூட்டைகளுக்கு மேல் விற்பனைக்கு வருகிறது.

கடந்த மாதத்தில் ரூ50க்கு விற்பனை செய்யப்பட்ட உருளைக்கிழங்கு, வரத்து அதிகரிப்பால் ரூ10 வரை விலை குறைந்து ரூ40க்கு விற்பனை செய்யப்பட்டது. பின் படிப்படியாக விலை குறைந்து கடந்த வாரத்தில் ரூ25க்கு விற்பனையானது. இந்நிலையில் வரத்து மேலும் அதிகரித்துள்ளதால், உருளைக்கிழங்கு விலை கடந்த ஒரு வாரத்தில் கிலோவிற்கு ரூ5 வரை குறைந்து, தற்போது ரூ20க்கு விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், 'கடந்த டிசம்பர் மாத இறுதியுடன் ஊட்டி உருளைக்கிழங்குகளின் சீசன் முடிந்துள்ள போதும், ஓசூர், பெங்களூர் உருளைக்கிழங்குகள் வரத்து அதிகரித்துள்ளதால் விலை மேலும் குறைந்துள்ளது. இதனால் விற்பனை அதிகரித்துள்ளது' என்றனர்.

**பண்ணை கழிவுகளை மறுசுழற்சி செய்தால் மண்வளம் கெடாது**

தர்மபுரி, : பண்ணைக் கழிவுகளை பயன்படுத்தி மறுசுழற்சி செய்தால், மண்வளம் பாதுகாக்கப்படும் என்று பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் பேராசிரியர் தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார். தர்மபுரி மாவட்ட விவசாயிகள், பண்ணை மகளிர் மற்றும் கிராமப்புற இளைஞர்களை மண்புழு உரம் உற்பத்தி செய்ய ஊக்குவிக்கும் வகையில், பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில், மண்புழு உர உற்பத்தி பற்றிய பயிற்சி மற்றும் செயல்விளக்கம் நடந்தது. பயிற்சி முகாமில் 90 விவசாயிகள், பண்ணை மகளிர் மற்றும் கிராமப்புற இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் தமிழ்செல்வன் பயிற்சி முகாமை துவக்கி வைத்து பேசியதாவது:

ரசாயன உரங்களை இடுவதால் மண், நீர் மற்றும் காற்று மாசு அடைகிறது. பண்ணைக்கழிவுகளை பயன்படுத்தி மறுசுழற்சி செய்தால் மண்வளம்

பாதுகாக்கப்படும். மகசூல் அதிகரிக்கும். விவசாயிகள் மண்புழு உரங்களை பயன்படுத்த வேண்டும். ஏக்கருக்கு 2 டன் என்றளவில் எருவை இயற்கை உரமாக பயன்படுத்தினால் மண்ணில் உயிரோட்டத்தை ஏற்படுத்தி, தாங்கள் சாகுபடி செய்யும் பயிர்களில் உரத்திற்காக ஆகும் செலவை சுமார் 25 சதவீதம் குறைக்கலாம். மேலும், 10 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைக்கும். இவ்வாறு பேராசிரியர் தமிழ்செல்வன் பேசினார்.

இந்த முகாமில், உதவி பேராசிரியர்கள் சங்கீதா, வெண்ணிலா, ஆண்டர்சன் அமலன் குமார் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**பூச்சி தாக்குதல், தண்ணீர் இல்லை திருக்கோவிலூர் பகுதியில் தர்பூசணி மகசூல் குறைந்தது**

திருக்கோவிலூர், : கோடை காலம் என்றாலே ஏழை முதல் பணக்காரர்கள் வரை மலிவு விலை பழங்களில் ஒன்றான நீர்ச்சத்து உள்ள தர்பூசணி பழத்தை அதிகளவில் வாங்கி உண்பர்.

தர்பூசணி பழங்கள் தற்போது திருக்கோவிலூர் அடுத்த வீரபாண்டி, சித்தலிங்கமடம், சுந்தரேசபுரம் அருணாபுரம், கல்லந்தல், பில்ராம்பட்டு, கீழத்தாழனூர், அம்மன்கொல்லைமேடு, ஆலம்பாடி, சித்தாமூர், சித்தாத்தூர், செங்கமேடு உள்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் 500 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர்.

சாகுபடி செய்யப்பட்டுள்ள தர்பூசணி பொதுவாக நடவு செய்த 45ம் நாள் பிஞ்சு விட்டு 80 நாளில் நன்கு வளர்ச்சி அடைந்து பழமாக விளைந்த தர்பூசணி ஏக்கருக்கு 10 டன் வரை அறுவடை செய்யப்படும். அப்போது ஒரு டன் தர்பூசணி 8 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது. இந்த ஆண்டு இப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட தர்பூசணிக்கு போதிய மழை இல்லாததால் விவசாயிகள் தண்ணீர் பாய்ச்ச முடியாமல் போனது. காய்க்க தொடங்கிய சில நாட்களிலேயே செடியும் இறந்து விடுவதோடு சில செடிகளில் வைக்கப்பட்ட காய்களும் பூச்சிகள் தாக்கி சிறிய அளவில் காய்கள் வைக்கிறது.

இதனால் ஏக்கருக்கு 10டன் வரை விளைந்த தர்பூசணி தற்போது வெறும் 3டன் வரை தான் விளைந்துள்ளது. அதுவும் மிகச்சிறிய அளவில் தான் இருக்கிறது.
இதனை வியாபாரிகள் டன் ஒன்றுக்கு 2ஆயிரம் வரை தான் கொள்முதல் செய்கின்றனர். இந்த ஆண்டு மகசூல் ஆன தர்பூசணி சிறிய அளவில் இருப்பதாலும், போதிய சுவை இல்லாததாலும் கொள்முதல் செய்வதற்கு வியாபாரிகள் ஆர்வம் செலுத்தாததால் பெரும்பாலான விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது.
தர்பூசணி சாகுபடி செய்து நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வெற்றிலை வரத்து அதிகரிப்பு**

கோவை, : பனிக்காலம் முடிவடைந்துள்ள நிலையில் கோவை டி.கே. மார்க்கெட்டுக்கு வெற்றிலை வரத்து அதிகரித்துள்ளது. இதனால், விலை ஒரு கவுளிக்கு 20 ரூபாய் குறைந்து விற்பனையானது.
திருச்சி மாவட்டம் தேவஸ்தானம், முசிறி, தொட்டியம், சாலைப்பேட்டை கரூர் மாவட்டம் புகளூர், நொய்யல், சேமங்கி, மரவாப்பாளையம், முத்தனூர், திருக்காடுதுறை, நஞ்சைப்புகளூர், புஞ்சைப்புகளூர், தோட்டக்குறிச்சி, தளவாய்ப்பாளையம் உள்ளிட்ட பகுதிகள், மற்றும் வேலூர், சேலம், தர்மபுரி மாவட்டங்களுக்கு உட்பட்ட 60 கிராமங்களில் 2000 ஏக்கருக்கு மேல் வெள்ளைக்கொடி, கற்பூரக்கொடி, பச்சைக்கொடி, சிறுகமணி-1, சிறுகமணி-2 ரக வெற்றிலைகள் பயிரிடப்படுகின்றன. சுமார் 15 ஆயிரம் விவசாயிகள் இத்தொழிலை நம்பி வாழ்கின்றனர். இங்கு பயிரிடப்படும் வெற்றிலைக்கு தமிழகம் மட்டுமின்றி மகாராஷ்டிரா, மேற்குவங்கம், ஆந்திரா உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் கடும் கிராக்கி உண்டு.
கடந்த மார்கழி மாதம் முதல் கார்த்திகை, தை மாதம் முழுவதும் கடுமையான பனி நிலவி வந்ததால் வெற்றிலைத் தோட்டங்களில் பெரும்பாலான வெற்றிலை கொடிகள் அழுகல் நோயால் பாதிக்கப்பட்டன. கடந்தாண்டை விட இந்தாண்டு திருச்சி, கரூர், வேலூர், தர்மபுரி மாவட்டங்களில் உள்ள வெற்றிலைத் தோட்டங்களில் அழுகல் நோயால் அதிகளவு வெற்றிலைக்கொடிகள்

பாதிக்கப்பட்டன. இதன் எதிரொலியாக வெற்றிலை வரத்து குறைந்து விலை வரலாறு காணாத அளவுக்கு அதிகரித்தது. கடந்த 2 மாதமாக 100 வெற்றிலை கொண்ட 1 கவுளி 60 முதல் 65 ரூபாய்க்கும் 104 கவுளி கொண்ட 1 சுமை 4,500க்கும் விற்பனையானது. பொங்கல் சமயத்தில் சராசரியாக 50 சதவீதம் வெற்றிலை விலை அதிகரித்ததால் நுகர்வோர் கடும் அதிர்ச்சி அடைந்தனர். இந்நிலையில் பனிக்காலம் முடிவடைந்துள்ளதால் வெற்றிலை விளைச்சல் அதிகரித்து கோவைக்கு வரத்து அதிகரித்துள்ளது. கடந்த 2 மாதமாக கோவைக்கு தினமும் 100 சுமை வந்து கொண்டிருந்த வெற்றிலை தற்போது 200 சுமையாக அதிகரித்துள்ளது. அதேபோல், கடந்த 10 நாட்களில் ரூ.60 முதல் 65க்கு விற்கப்பட்ட 1 கவுளி வெற்றிலை நேற்றைய நிலவரப்படி ரூ.40 முதல் 45க்கு விற்பனையானது.

இதுகுறித்து வெற்றிலை விவசாயி ஒருவர் கூறுகையில், ‘பனிக்காலம் என்பதால் மார்கழி மாதம் முதல் வெற்றிலை வரத்து பெருமளவு குறைந்திருந்தது. அதே சமயம் திருமண முகூர்த்தங்கள், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விலை கடுமையாக உயர்ந்திருந்தது.

10 நாட்களாக பனி குறைந்துள்ளதால் வரத்து அதிகரித்து விலையும் கணிசமாக குறைந்துள்ளது. அடுத்த மாதம் முதல் விஷேச நாட்கள் அதிகம் வர இருப்பதால் வெற்றிலை விலை அதிகரிக்கும்’ என்றார்.

**கோடை பருவத்தில் நெல் சாகுபடிக்கான நவீன தொழில்நுட்பம் வேளாண்துறை விளக்கம்**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை வட்டாரம் சோத்துப்பாளை கிராமத்தில் வேளாண்மைத் துறையினரால் நடத்தப்படும் முன்பருவ முனைப்பு இயக்கம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை வட்டார வேளாண் உதவி இயக்குநர் ரவிச்சந்திரன் தலைமை வகித்து பேசுகையில், கோடைப் பருவத்தில் நெல் சாகுபடி செய்வதற்கான தொழில்நுட்பங்களையும், பயறுவகை சாகுபடி செய்வதன் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தினையும், மக்காச்சோளம் சாகுபடிக்கான

தொழில்நுட்பங்களையும் விளக்கினார். இதில் கோடையில் குறைந்த வயதுடைய நெல் ரகங்களான ஆடுதுறை 43, ஆடுதுறை37, ஆடுதுறை (ஆர்)45, கோ.ஆர்.எச்3 ஆகியவற்றினை திருந்திய நெல் சாகுபடி முறையில் ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் விதையினை விதை நேர்த்தி செய்து, 40 ச.மீ. அளவில் மேட்டுப்பாத்தியில் விதைத்து 14 முதல் 17 நாட்கள் வயதுடைய நாற்றுகளை துல்லியமாக சமன் செய்த நடவு வயலில் இடைவெளி குறியிடும் மார்க்கர் கருவி கொண்டு 22.5*22.5 செ.மீ இடைவெளியில் இரு பக்கங்களிலும் குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்வதன் அவசியத்தையும், தண்ணீர் பாய்ச்சுதலை பாய்ச்சலும், காய்ச்சலும் முறையில் செய்வதையும், கோனோ வீடர் கருவியினை 10 நாட்கள் இடைவெளியில் நான்கு முறை உபயோகிப்பதால் அதிக தூர் கட்டுவதுடன் களைகள் கட்டுப்படுவதையும் எடுத்துக் கூறினார். மேலும், இலை வண்ண அட்டையினை உபயோகித்து தேவையான அளவு மட்டும் தழைச் சத்து இட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் ஏக்கருக்கு சராசரியாக 6 மெ.டன் மகசூல் பெற முடியும் என்றார்.
வேளாண் அலுவலர் பூபதிகண்ணன் பேசுகையில், கோடைப்பருவத்தில் பூச்சி நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட வம்பன்4, வம்பன்5 மற்றும் வம்பன்6 உளுந்து ரகங்களையும், கோ.ஆர்.ஜி 7 வம்பன் 3 ஆகிய துவரை ரகங்களையும் ஆடுதுறை 3 மற்றும் வம்பன் 3 பாசிப்பயறு ரகங்களையும், பயிரிடுவதன் அவசியத்தையும், மேலும், விதைகளை ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியா கொண்டு விதை நேர்த்தி செய்து, துவரையினை 45*30 செ.மீ இடைவெளியிலும் பாசிப்பயறு மற்றும் உளுந்து விதைகளை 30*10செ.மீ இடைவெளியில் பயிரிட வேண்டும். அடியுரமாக ஏக்கருக்கு 110 கிலோ ஜிப்சம் மற்றும் 5 கிலோ பயறு நுண்ணூட்டக் கலவையினை இட வேண்டும், பூக்கும் தருணத்தில் இரண்டு முறை இரண்டு சத டி.ஏ.பி கரைசலை தெளிக்க வேண்டும், பயறு வளர்ச்சி ஊக்கியினை ஏக்கருக்கு 5 கிலோ என்ற அளவில் பயன்படுத்தி மகசூலை பெருக்கிடலாம் என்றும் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சிநோய் நிர்வாகத்தின் மூலம் மகசூல் இழப்பினை குறைத்திட வேண்டும் என்றார்.

மக்காச்சோளம் சாகுபடியின் முக்கியத்துவத்தினை குறித்து விதை ஆய்வு அலுவலர் பாண்டி கூறுகையில், உயர் விளச்சல் ரகங்களான கே1, கே2,

கோ.எச்(எம்)4, கோச்(எம்)5 ஆகிய ரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களை பயன்படுத்தி உயிர் உர விதை நேர்த்தி செய்து 60*20 செ.மீ இடைவெளியில் விதைத்து ஒருங்கிணைந்த உரம் மற்றும் பூச்சி தடுப்பு மேலாண்மை ஆகியவற்றினை மேற்கொண்டு அதிக மகசூல் பெறவேண்டும் என்றார்.வரப்பு பயிரின் பயன்பாடு...

வரப்பு பயிராக பாசிப்பயறு, தட்டைபயறு போன்றவற்றினை பயிரிடும்போது நெற்பயிரை தாக்கும் பூச்சி நோய்களை கட்டுப்படுத்துவதுடன் உபரி வருமானமும், கால்நடை தீவனமும் கிடைக்கும்.

## 105 பேருக்கு இலவச ஆடுகள்

வாலாஜாபாத், : வாலாஜாபாத் ஒன்றியம் பழையசீவரம் ஊராட்சியில் தமிழக அரசின் இலவச வெள்ளாடு வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. ஒன்றியக்குழு தலைவர் வரதராஜுலு தலைமை வகித்தார்.

உத்திரமேரூர் எம்எல்ஏ வாலாஜாபாத் கணேசன் கலந்து கொண்டு 105 பயனாளிகளுக்கு வெள்ளாடுகளை வழங்கினார். மாவட்ட கவுன்சிலர் பிரபாகரன், கால்நடைத்துறை உதவி இயக்குனர் அண்டனி, ஊராட்சி தலைவர் மணிமேகலை பெருமாள், கூட்டுறவு சங்க தலைவர் தனசேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### ரேடார் கருவி பொருத்தப்படும் சென்னை மைய இயக்குனர் ரமணன் தகவல்



**நாமக்கல்,**

வானிலையை துல்லியமாக ஆய்வு செய்யும் பொருட்டு, காரைக்காலில் விரைவில் ரேடார் கருவி பொருத்தப்பட உள்ளது என சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் நாமக்கல்லில் கூறினார்.

<u>கருத்தரங்கு</u>

நாமக்கல் வானிலை ஆய்வு மைய அலுவலகத்தில் கோழி வளர்ப்பில் வானிலையின் முக்கியத்துவம் குறித்த ஒருநாள் கருத்தரங்கு நேற்று நடைபெற்றது. இதில் சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு புயல் எவ்வாறு உருவாகிறது? எதுபோன்ற சூழ்நிலையில் அதிக மழை பெய்யும் என்பது குறித்து பண்ணையாளர்களுக்கு வரைபடங்களுடன் விளக்கம் அளித்தார்.பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது கூறியதாவது:-

கடந்த 2004-ம் ஆண்டு முதல் 2011-ம் ஆண்டு வரை தமிழகத்தில் இயல்பான மழைபொழிவும், இயல்பை விட அதிக மழைபொழிவும் இருந்து உள்ளது. கடந்த ஆண்டு இயல்பை காட்டிலும் 33 சதவீதம் குறைவாகவே மழை பெய்து உள்ளது. கடலில் ஏற்படும் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், தாழ்வு பகுதி, புயல் போன்றவை மழைக்கான முக்கிய காரணிகளாக உள்ளன.

ரேடார் கருவி

இதுபோன்ற நிகழ்வுகள் கடந்த 2 ஆண்டுகளில் தமிழகத்தில் மிக குறைவாகவே நடந்து உள்ளன. இவை ஆந்திராவை நோக்கி சென்றதால், காற்றின் திசை மாறி, ஆந்திராவின் கடலோர மாவட்டங்களில் நல்ல மழை பெய்து உள்ளது. வங்க கடலில் இதுபோன்ற நிகழ்வுகள் தோன்றி, மன்னார் வளைகுடா வழியாக வந்தால், தமிழகத்திற்கு நல்லமழை கிடைக்கும். கணினி சார்ந்த கணிப்புகளை பொறுத்த வரையில் 10 நாட்களுக்கு முன்பு ஓரளவு வானிலையை நன்கு கணிக்க முடியும். வானிலை ஆராய்ச்சியில் கணினியின் பயன்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது. காரைக்காலில் வானிலையை துல்லியமாக ஆய்வு செய்யும் பொருட்டு விரைவில் ரேடார் கருவி பொருத்தப்பட உள்ளது. தமிழகம் முழுவதும் தானியங்கி மழைமானிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

கலந்துரையாடல்

கருத்தரங்கு முடிந்தபின், இயக்குனர் ரமணன், கோழிப்பண்ணையாளர்களுடன் கலந்துரையாடினார். அப்போது இடி, மின்னல் நேரிடும் போது, கார், விமானம் போன்றவற்றில் சென்றால் ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளதா? என பண்ணையாளர்கள் கேள்வி எழுப்பினர். விமானத்தில் செல்லும்போது மின்னல் ஏற்பட்டால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. அதேபோல் காரிலும் சென்று கொண்டு இருந்தால், மின்னல் தாக்க வாய்ப்பு இல்லை. காரை நிறுத்தி கீழே இறங்கினால், தாக்க வாய்ப்பு உள்ளது என்றார். அப்போது பண்ணையாளர்கள் கடந்த 15 நாட்களுக்கு முன்பு நாமக்கல் மாவட்டத்தில் திடீரென பயங்கர சத்தம் ஒன்று கேட்டது. அது பற்றி உங்கள் கருத்து என்ன? என்று கேள்வி எழுப்பினர்.

அப்போது குறுக்கிட்டு பேசிய நாமக்கல் வானிலை ஆய்வு மைய அலுவலர் டாக்டர் நடராஜன், அன்று சேலம் கலெக் டர் அலுவலகத்தில் உள்ள கருவியில் நிலநடுக்கம் பதிவாகவில்லை. எனவே பூமிக்கு கீழ் இருந்து அந்த சத்தம் வரவில்லை என உறுதிபடுத்தப்பட்டு உள்ளது. ஆதலால் பூமிக்கு மேலே இருந்துதான் சத்தம் வந்து இருக்க வேண்டும் என்றார்.

**குன்னூரில் பூண்டு பயிர்களை காக்க சொட்டுநீர் பாசன முறையில் தண்ணீர் தெளிப்பு**



குன்னூரில் தற்போது கடும் பனிப்பொழிவு ஏற்பட்டு வருவதால் பூண்டு பயிர்களை காக்க சொட்டுநீர் பாசன முறையில் விவசாயிகள் தண்ணீர் தெளித்து வருகிறார்கள்.

<u>காய்கறி சாகுபடி</u>

நீலகிரி மாவட்டம் கேரட், முள்ளங்கி, உருளைக் கிழங்கு, பீன்ஸ், குடை மிளகாய், முட்டை கோஸ், பீட்ரூட் உள் ளிட்ட காய்கறிகளை அதிகளவு விளைவிக்கும் மாவட்டமாக திகழ்கிறது. மலை மாவட்டமாக உள்ளதால் தேயிலைக்கு அடுத்தபடியாக இந்த காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இங்கு விளைவிக்கப்படும் காய்கறிகள் மேட்டுப்பாளையம் மார்க்கெட்டிற்கு அதிகளவு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களுக்கும் அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**<u>பூண்டு பயிரிடும் விவசாயிகள்</u>**

குன்னூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் பகல் நேரங்களில் சமவெளி பகுதிகளுக்கு ஈடாக கடுமையான வெயிலும், மாலை 6 மணி முதல் காலை 9 மணி வரை கடுங்குளிரும் நிலவி வருகிறது. இந்த குளிர் காரணமாக தேயிலை தோட்டங்கள்மற்றும் மலைத் தோட்ட காய்கறிகள் கருகி வருகின்றன.

இந்த நிலையில் குன்னூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான இளித்தொரை, எடப்பள்ளி போன்ற பகுதிகளில் பூண்டு சாகுபடி மேற்கொள் ளப்பட்டு வருகிறது. தற்போது கிலோ ஒன்றுக்கு ரூ.120 முதல் ரூ.150 வரை விலை கிடைப்பதால் ஏராளமான விவசாயிகள் பூண்டு பயிர்களை தற்போது பயிரிட்டு உள்ளனர்.

**<u>தண்ணீர் தெளிப்பு</u>**

குன்னூர் பகுதியில் தற்போது ஏற்பட்டு உள்ள சீதோஷ்ண நிலை மாற்றத்தின் காரணமாக காய்கறி விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டு உள்ளது. இதில் பூண்டு விவசாயமும் தப்பிவிட வில்லை. பனி தாக்கத்தின் காரணமாக பூண்டின் இலை மற்றும் தண்டு கருகி உள்ளது. இதனால் அதன் மகசூல் பெருமளவில் பாதிக்கப்பட்டு உள்ளது.

இதையடுத்து, வசதிபடைத்த விவசாயிகள் வறட்சி மற்றும் உறைபனியில் இருந்து பாதுகாப்பதற்காக பூண்டு பயிருக்கு சொட்டு நீர் பாசன முறையில் தண்ணீர் தெளித்து வருகிறார்கள்.

இவ்வாறு தண்ணீர் தெளிக்கும் போது அது பசுமையாக உள்ளது. ஆனால் குறைந்த அளவு பூண்டு சாகுபடி செய்து உள்ள விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

## பண்ணைக்குட்டைகளில் மீன் வளர்க்கும் விவசாயிகளுக்கு மானியமாக இடுபொருட்கள் வழங்கப்படும் வேளாண்மை அதிகாரி தகவல்

பட்டுக்கோட்டை,

பண்ணைக்குட்டைகளில் மீன் வளர்க்க முன்வரும் விவசாயிகளுக்கு ஓராண்டுக்கு இடுபொருட்கள் மானியமாக வழங்கப்படும் என்று பட்டுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் மோகன் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

<u>பண்ணை குட்டை அமைத்து தரப்படும்</u>

தமிழ்நாட்டில் பருவமழை பொய்த்ததன் காரணமாக காவிரி டெல்டா மாவட்டங்களில் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் பண்ணை குட்டைகள் அமைக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இப்பண்ணை குட்டைகளை பயன்படுத்தி விவசாயிகள் பயிர்களை நீர்வற்றிய காலங்களில் காத்திட தேவைப்படும் இறுதிகட்ட நீர்த்தேவையை பூர்த்தி செய்வதுடன் அவற்றில் மீன் வளர்ப்பதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வருவாயை ஈட்ட முடியும்.

விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்படும் பண்ணை குட்டைகளில் மீன் வளத்துறை மூலம் மீன் வளர்க்க ஓராண்டுக்கு தேவையான இடுபொருட்கள் மானியமாக வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயனடைய விரும்பும் விவசாயிகள் பட்டுக்கோட்டை வட்டாரம் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம். பண்ணை குட்டை அமைக்க விண்ணப்பித்த விவசாயிகளுக்கு பட்டுக்கோட்டை வட்டார ஊரக வளர்ச்சித்துறை மூலம் பண்ணை குட்டை அமைத்து தரப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**இறால் பண்ணை அமைப்போரின் எண்ணிக்கையை அதிகரிக்க தொழில் முனைவோருக்கு பயிற்சி 11-ந்தேதி தொடங்குகிறது**

**நாகப்பட்டினம்,**

இறால் பண்ணை அமைப்போரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் இறால் வளர்ப்பு தொழில் முனைவோருக்கு பயிற்சி அடுத்தமாதம் 11-ந்தேதி தொடங்குகிறது.

இதுகுறித்து நாகை தமிழ்நாடு மீன்வளப்பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் மீன்வள தொழில்நுட்ப இயக்குனர் நாகூர்மீரான் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

<u>இறால் உற்பத்தி</u>

தமிழகத்தில் ஏறக்குறைய 56 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் உவர் நிலங்கள் உள்ளன. இதில் சுமார் 6 ஆயிரத்து 109 எக்டேர் பரப்பளவு நிலம் மட்டும் உபயோகப்படுத்தப்பட்டு சுமார் 15 ஆயிரம் டன் இறால் உற்பத்தி செய்யப்படுகிறது. அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் இறால்களில் 99 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது இறாலின் ஏற்றுமதி சந்தை மதிப்பு நன்றாக உள்ளதாலும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நோய் தாக்காத லிட்டோபினயிஸ் வன்னமயி வகை இறால் குஞ்சுகள் அதிகமாக கிடைப்பதாலும் இறால் உற்பத்தி இந்தியாவில் அதிகரித்து வருகிறது.

<u>பதிவு செய்ய வேண்டும்</u>

எனவே இந்த துறையில் விருப்பமுள்ள தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளித்து, இறால் பண்ணை அமைப்போரின் எண்ணிக்கையை அதிகரிக்க நாகை மீன்வளத் தொழில் நுட்ப நிலையம் சார்பில் தொழில் நுட்ப வல்லுனர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதற்கான பயிற்சி காலம் 15 நாட்கள் ஆகும். வருகிற பிப்ரவரி 11-ந் தேதி தொடங்கி 27-ந் தேதி முடிவடைகிறது. பயிற்சி

கட்டணம் ரூ.3 ஆயிரத்து 500 ஆகும். பயிற்சியில் சேர விரும்புவோர் தமிழில் எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும். இந்த பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பமுள்ள தொழில் முனைவோர்கள் நாகையில் உள்ள தமிழ்நாடு மீன்வளப்பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் மீன்வள தொழில்நுட்ப நிலையத்தை தொடர்பு கொண்டு தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**கால்நடை விவசாயிகளுக்கு மானிய விலையில் வைக்கோல் வினியோகம் கலெக்டர் தகவல்**



**பெரம்பலூர்** மாவட்டத் தில் உள்ள கால்நடை விவசாயிளுக்கு மானிய விலையில் வைக்கோல் வினியோகம் செய்யப்பட உள்ளதாக கலெக்டர் தரேஸ் அஹமது தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டு உள்ள ஒரு செய்திக் குறிப்பில் கூறியிருப்ப தாவது:–

<u>கால்நடை தீவனம் விலை உயர்வு</u>

தமிழகத்தின் இருபருவ மழையும் பொய்த்து போன தால் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து விவசாயத்திற்கு நீர் இல்லாத நிலை உருவாகி உள்ளது.

மேய்ச்சலுக்கு புல் இல்லா ததாலும், சோளம் மற்றும் மக்காச்சோளம் சரியாக விளையாததாலும் வீரிய கால் நடை தீவன உற்பத்தி பரப்ப ளவு குறைந்த காரணத்

தாலும் கால்நடைக்கு தீவன பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது. இதனால் கால்நடை தீவனத்தின் விலை கடுமையாக உயர்ந்து உள்ளது.

ரூ.2–க்கு ஒரு கிலோ வைக்கோல்

இடுபொருட்கள் விலை அதிகமான படியால் மாடு களை வைத்திருக்கும் விவசாயி கள் மிகுந்த சிரமத்தில் உள்ள னர். விவசாயிகள் தங்களிடம் உள்ள மாடுகளை வந்த விலைக்காவது விற்று விடலாம் என்ற முடிவுக்கு வந்துள்ள நிலையில் தமிழக முதல்–அமைச்சர், கால்நடை வளர்ப்போர் நலன் கருதி கால்நடைகளுக்கு உலர் வைக் கோல் தீவனத்தை மானிய விலையில் வழங்க ரூ.12 கோடியே 50 லட்சத்தை அனைத்து மாவட்டங்களுக் கும் ஒதுக்கீடு செய்து உள் ளார். ஒரு கிலோ வைக்கோல் ரூ.2 என்ற மானிய விலையில் ஒரு மாட்டிற்கு ஒரு நாளைக்கு 3 கிலோ வீதம் அதிகபட்சம் 5 மாடுகளுக்கு வாராந்திர தேவையின் அடிப்படையில் வாரம் ஒரு முறை தொடர்ச் சியாக இரண்டு முதல் மூன்று மாதங்களுக்கு வழங்க திட்ட மிடப்பட்டுள்ளது.

பதிவு செய்ய வேண்டும்

கால்நடை வளர்ப்போர் தங்களது ரேஷன் கார்டு நகல், பாஸ்போர்ட் அளவு புகைப் படம் 2 மற்றும் கால்நடைகளின் இருப்பு விவரம் ஆகியவற்றை அருகில் உள்ள அரசு கால் நடை மருந்தகங்களில் கொடுத்து பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பதிவு செய்தவர்களுக்கு விரைவில் கால்நடை தீவனம் வழங்கும் அட்டை வழங்கப் படும். இந்த அட்டையை வைத்தி ருந்தால் மட்டுமே இத்திட்டத் தில் பயன்பெற முடியும்.

தீவன கிடங்கு

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு பேரூராட்சி, 20 கிராம ஊராட்சிகளும், வேப்பந்தட்டை ஒன்றியத்தில் 2 பேரூராட்சிகள், 29 கிராம ஊராட்சிகளும் பயன்பெறும் வகையில் சந்திரமனை கால்நடை மருந்தக வளாகத் தில் ஒரு

உலர்தீவன கிடங்கும், வேப்பூர் ஒன்றியத்தில் ஒரு பேரூராட்சி, 33 கிராம ஊராட்சிகளும், ஆலத்தூர் ஒன்றியத் தில் 39 கிராம ஊராட்சிகளும் பயன்பெறும் வகையில் மேல மாத்தூர் கால்நடை மருந்தக வளாகத்தில் ஒரு கிளை உலர் தீவன கிடங்கும் அமைப்பதற்கு முதல்–அமைச்சர் ரூ.10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். சத்திரமனை மற்றும் மேல மாத்தூர் தீவன கிடங்குகளுக்கு தனித்தனியாக உலர்ந்த வைக்கோல் வாங்கி 10 கிலோ கட்டுகளாக கட்டி வண்டியில் ஏற்றி குறிப்பிட்ட இடங்களில் இறக்கி அடுக்கி போர் போட்டு தந்து வாரம் 10 டன் வீதம் தொடர்ந்து 2 முதல் 3 மாதங்களுக்கு வழங்க விருப்பம் உள்ள விவசாயிகள் ஒரு கிலோ வைக்கோல் விலையை குறிப்பிட்டு மூடி முத்திரையிடப்பட்ட போட்டி விலைப்புள்ளியினை வருகிற 05.02.2014–ந் தேதி மாலை 5 மணிக்குள் அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப் படுகிறார் கள். இவ்வாறு அதில் கூறப்பட் டுள்ளது.

**ஆண்டிமடம் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் ஜிப்சம் வினியோகம்**

**ஆண்டிமடம்,**

ஜெயங்கொண்டம் அருகே உள்ள ஆண்டிமடம் வேளாண் வட்டார பகுதிகளான குவாகம், வாரியங்காவல் ஆகிய கிராமங் களில் கோடைகால பருவ பயிர் சாகுபடி முனைப்பு முகாம் நடந்தது. முகாமிற்கு ஆண்டி மடம் வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்கி பேசினார். அவர் பேசும் போது, ஆண்டிமடத்தில் உள்ள வேளாண் விரிவாக்க மையத் தின் மூலம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 50 சதவீத மானியத்தில் ஜிப்சம் வினியோகம் செய்யப்பட்டு வருவ தாவும், அனைத்து விவசாயிகளும் இதனை வாங்கி பயனடையு மாறும் கேட்டுக்கொண்டார். இதனை தொடர்ந்து நடமாடும் தெளிப் பான், பூம் தெளிப்பான் கொண்டு செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. முகாமில் உதவி வேளாண் அலுவலர் அப்பாவு, உதவி அலுவலர்கள் ராஜதுரை, சசி குமார் மற்றும் துணை வேளாண் அலுவலர்கள், விவ சாயிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் அந்தோணிராஜ் நன்றி கூறினார்.

**முருங்கைக்காய் விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை**



**அரவக்குறிச்சி,**

முருங்கைக்காய் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்து உள்ளனர்.

முருங்கை சீசன் தொடக்கம்

கரூர் மாவட்டம் அரவக் குறிச்சி தாலுகாவில் அரவக் குறிச்சி ஒன்றியம், க.பரமத்தி ஒன்றியம், அரவக்குறிச்சி பேரூராட்சி, பள்ளபட்டி பேரூராட்சி ஆகிய பகுதிகள் உள்ளன. இதில் அரவக்குறிச்சி ஒன்றியப்பகுதியில் 20 ஊராட்சிகளும், க.பரமத்தி ஒன்றியப்பகுதியில் 30 ஊராட்சிகளும் உள்ளன. அரவக்குறிச்சி தாலுகா பகுதி பெரும்பாலும் விவசா யத்தையே நம்பி வாழும் பகுதியாகும். இந்த பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை இருப் பதால் கிணற்றில் கிடைக்கும் குறைந்த அளவு நீரைக் கொண்டு முருங்கை பயிரிடுதல் மற்றும் ஆடு, மாடுகள் வளர்த்து வருகின்றனர்.அரவக்குறிச்சி சுற்று வட்டாரப் பகுதிகளில் சுமார் 50 ஆயிரம் ஏக்கருக்கு மேல் முருங்கை பயிரிட்டுள்ளனர். தற்போது மிகக் கடுமையான வறட்சியான சூழ்நிலையில் இந்த பகுதி விவசாயிகளுக்கு முருங்கை சாகுபடி மட்டுமே வாழ்வாதாரமாக விளங்கு கிறது. தற்போது முருங்கை யில் பூ பூத்து காய்கள் காய்க்க தொடங்கி உள்ளன. முருங் கையில் செடிமுருங்கை, மரமுருங்கை என இரு வகை உள்ளன.

<u>விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலை</u>

கடந்த டிசம்பர் மாதம் இறுதியில் முருங்கை காய்கள் விளைச்சல் குறைவாக இருந்ததால் கிலோ ரூ.120–க்கு விற்பனையானது. தற்போது மர முருங்கைக்காய் ஒரு கிலோ ரூ. 40–க்கு விற்பனை ஆகிறது. இப்போது முருங்கை சீசன் என்பதாலும், ஏராள மான விவசாயிகள் முருங்கையை பயிர் செய்து உள்ளதாலும் மார்க்கெட்டிற்கு முருங்கை காய் வரத்து அதிகரித்து உள்ளது.எனவே முருங்கைக் காய் விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்து உள்ள னர்.

<u>வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி</u>

இதுபற்றி முருங்கை வியா பாரிகள் கூறியதாவது:–

இந்த பகுதியில் தற்போது முருங்கை சீசன் தொடங்கி உள்ளது. மேலும் ஜனவரி, டிசம்பர் மாதங்களை தவிர மற்ற மாதங்களில் விளைச்சல் அதிகரிக்கும். வியாபாரி களாகிய நாங்கள் அரவக் குறிச்சி, சின்னதாராபுரம், க.பரமத்தி, பள்ளப்பட்டி, ஆத்துமேடு, ஈசநத்தம் உள் ளிட்ட அரவக்குறிச்சி பகுதிகளில் விவசாயிகளிடம் இருந்து முருங்கைக்காய்களை மொத்தமாக வாங்கி பெங் களூர், சென்னை, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, விஜய வாடா உள்ளிட்ட பல பகுதி களுக்கு லாரிகள் மூலம் ஏற்றுமதி செய்து வருகிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கொடைக்கானலில் கேரட் விலை வீழ்ச்சி**



**கொடைக்கானல்,**

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மேல்மலைப் பகுதிகளான பூம்பாறை, பூண்டி, கவுஞ்சி, மன்னவனூர், வில்பட்டி, பள்ளங்கி உள்பட பல்வேறு கிராமப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் கேரட் பயிரிடப்பட்டு வருகின்றது. தற்போது போதிய மழை இல்லாவிட்டாலும் கூட கேரட் போதுமான அளவில் விளைச்சல் கண்டுள்ளது. சில்லரை விலையாக ஒரு கிலோ கேரட் ரூ.10 முதல் ரூ.15 வரை விற்பனை செய்யப்பட்டாலும், விவசாயிகளுக்கு ஒரு கிலோவுக்கு ரூ.6 மட்டுமே கிடைக்கின்றது. இந்த விலைவீழ்ச்சியால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர். எனவே கொடைக்கானலில் விளையும் காய்கறிகளை கொள்முதல் செய்ய, அரசு கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தேனி மாவட்டத்தில் போதிய விலை கிடைக்காமல் வீணாகும் செண்டுப்பூக்கள் விவசாயிகள் கவலை**



**தேனி,**

தேனி மாவட்டத்தில் போதிய விலை கிடைக் காமல் செண்டுப் பூக்கள் செடியிலேயே பறிக்கப்படாமல் வீணாகி வருகிறது. இதனால் விவசாயிகள் பாதிக்கப் பட்டு உள்ளனர்.

செண்டுப்பூக்கள்: தேனி மாவட்டத்தில், நெல், திராட்சை, வாழை, காய்கறி பயிர்களுக்கு அடுத்தபடியாக பூக்கள் சாகுபடியும் குறிப்பிட்ட அளவில் நடக்கிறது.

மாவட் டத்தின் பல்வேறு பகுதி களிலும் கிணற்று நீரை நம்பி பூக்கள் சாகுபடியில் விவசாயி கள் ஈடுபட்டு உள்ளனர். கோவில் திருவிழாக்கள், முகூர்த்த நாட்களில் மட்டுமே பூக்களின் விலை உயர்ந்து காணப்படும். மற்ற நேரங்களில் பூக்களின் விலை குறைவாகவே காணப்படும்.

குறிப்பாக செண்டுப்பூ, செவ்வந்தி, கோழிக் கொண்டை போன்ற பூக்கள் கோவில் திருவிழாக்களின் போது மட்டுமே தேவை அதிகம் இருக்கும். இதனால் அத்தகைய காலக்கட்டத்தில் மட்டுமே இந்த பூக்களின் விலை அதிக அளவில் இருக் கும். தற்போது தேனி மாவட் டத்தில் பூக்களின் தேவை குறைவாகவே உள்ளது.

செண்டுப் பூ கிலோ ரூ.6

குறிப்பிடும் படியான கோவில் திருவிழாக்கள் எதுவும் இல்லாததால் செண்டுப் பூக்களின் விலை ஒரேஅடியாக வீழ்ச்சி அடைந்து உள்ளது. கடந்த 2 மாதங்களுக்கு முன்பு கிலோ ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்பட்ட செண்டுப் பூக்கள் தற்போது கிலோ ரூ.6 முதல் ரூ.8 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பூக்களை பறிக்கும் கூலித்தொழிலாளர்களுக்கு கொடுக்கும் அளவில் கூட விலை கிடைக்கவில்லை. காலை நேரத்தில் குறிப்பிட்ட சில மணி நேரம் மட்டும் பூக்கள் பறிக்கும் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு ரூ.120 கூலி வழங்கப்படுகிறது. ஒருநபர் சராசரியாக 25 கிலோ முதல் 35 கிலோ வரை பூக்கள் பறிப்பார். ஆனால் ரூ.6-க்கு விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். நஷ்டம் ஏற்படுவதால் கொடுவிலார் பட்டி, நாகலாபுரம் பகுதிகளில் விவசாயிகள் சிலர் தங்களின் தோட்டத்தில் பூக்களை பறிக்காமல் விட்டுள்ளனர். தேனி பூ மார்க்கெட்டில் ஒரு கிலோ பூக்களின் விலை விவரம் வருமாறு:-

செவ்வந்தி பூ-ரூ.25, சம்பங்கி -ரூ.40, மல்லிகை பூ-ரூ.500, கனகாம்பரம்-ரூ.200, சாதிப் பூ-ரூ.400, கோழிக்கொண்டை -ரூ.20 என விற்பனை செய்யப் பட்டது. மேலும் துளசி- ரூ.40-க்கும், மரிக்கொழுந்து -ரூ.40-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இன்றைய வேளாண் செய்திகள்

## தமிழகத்தில் உணவு தானிய உற்பத்தி 100 லட்சம் மெட்ரிக் டன் அளவை விஞ்சும்: ஆளுநர் நம்பிக்கை



தமிழகத்தில் கடும் வறட்சி நிலவியபோதும், இந்த நிதியாண்டில் உணவு தானிய உற்பத்தி 100 லட்சம் மெட்ரிக் டன் அளவைக் கடந்துவிடும் என்று ஆளுநர் ரோசய்யா நம்பிக்கை தெரிவித்தார்.

இதுகுறித்து சட்டப் பேரவையில் வியாழக்கிழமை அவர் பேசியதாவது: முதன்மைத் துறையில் ஈடுபட்டுள்ள மக்களின் வருவாயைக் கணிசமாக உயர் த்தாமல், அனைவருக்கும் பலன் அளிக்கக்கூடிய வளர்ச்சியை அடைவது சாத்தியமில்லை. இந்த வகையில், உயர் தொழில்

நுட்பங்களைப் பரவலாக்குதல், நுண்ணீர்ப் பாசனம் மற்றும் பண்ணை இயந்திரப் பயன் பாட்டைப் பிரபலப் படுத்துதல் போன்ற உத்திகளைப் பின்பற்றி,

வேளாண் பயிர்களின் உற்பத்தித் திறனையும் மொத்த உற்பத்தியையும் உயர்த்துவதற்கு அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

அறுவடைக்குப் பிந்தைய மற்றும் சந்தைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட, கணிசமான முதலீடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பழங்கள், காய்கறிகள் போன்ற அதிக வருவாய் தரும் பயிர்களின் சாகுபடியை ஊக்குவிப்

பதற்காக பல புதுமையான முறைகள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. 2011-12ம் ஆண்டில் அதிக உணவு தானிய உற்பத்தியை எட்டியதற்காக, நமது மாநிலத்துக்கு மத்திய அரசின் ‘கிருஷி கர்மான் விருது’ கிடைத்துள்ளது மனநிறைவு அளிக்கிறது.

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை அளவு 33 சதவீதம் குறைவாகப் பெய்துள்ள சூழ்நிலையிலும், 2013-14ம் ஆண்டில் மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி 100 லட்சம் மெட்ரிக் டன் அளவை விஞ்சும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு ஆளுநர் பேசினார்.

## திண்டுக்கல்: பெங்களூரு ஹைபிரீட் வருகையால் தக்காளி கிலோ ரூ.2: மிரட்டும் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கண்ணீர்



பெங்களூரு ஹைபீரிட் தக்காளி வரத்தால் தமிழகத்தில் தக்காளி விலை கடும் வீழ்ச்சியடைந்து வருகிறது. திண்டுக்கல் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் திங்கள்கிழமை கிலோ ரூ.2-க்கு தக்காளி விலை வீழ்ச்சியடைந்ததால் விற்பனையாகாமல் தேக்கமடையத் தொடங்கியுள்ளன.

தமிழகத்தில் திண்டுக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் நாமக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களில் தக்காளி சாகுபடி அதிகளவு நடைபெறுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த காலத்தில் ஆண்டுக்கு 2,563 ஹெக்டேரில் விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்தனர். தமிழகத்தில் தக்காளிக்கு கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டையில் மிகப்பெரிய தக்காளி சந்தை செயல்படுகிறது. அதற்கு அடுத்து திண்டுக்கல் ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டுக்கு தக்காளி அதிகளவு

விற்பனைக்கு வருகிறது. இந்த மார்க்கெட்டில் இருந்து வடமாநிலங்கள், கேரளம் மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு தக்காளி ஏற்றுமதியாகிறது.

**பருவமழை இல்லை**

கடந்த மூன்று ஆண்டுகளாக திண்டுக்கல் மாவட்டத்தில் பருவமழை பொய்த்துவிட்டதால் இந்த ஆண்டு ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, ரெட்டியார்சத்திரம், வடமதுரை, வத்தலகுண்டு, நிலக்கோட்டை உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளில் 1,277 ஹெக்டேரில் மட்டும் விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்துள்ளனர். அதனால், தக்காளி சாகுபடி பரப்பு இந்த ஆண்டு 50 சதவீதம் குறைந்துள்ளது.

**பரபரப்பு குறைந்தது**

மற்ற மாவட்டங்களிலும் எதிர்பார்த்த பருவமழையில்லாததால் தமிழகத்தின் மொத்த தக்காளி பரபரப்பு இந்த ஆண்டு 40 சதவீதம் குறைந்தது. ஆனால், கர்நாடகம், ஆந்திரத்தில் வடகிழக்கு, தென்மேற்கு பருவமழை அதிகளவு பெய்ததால், அந்த மாநிலங்களில் இருந்து தற்போது அதிகளவு ஹைபீரிட் தக்காளி தமிழகச் சந்தைகளுக்கு வரத்தொடங்கியுள்ளன. குறிப்பாக கர்நாடகத்தில்ல் இருந்து பெங்களூரு ஹைபிரீட் தக்காளி திண்டுக்கல் மாவட்ட காய்கறி மார்க்கெட்டுகளுக்கு வரத்தொடங்கியுள்ளது. அதனால், கடந்த ஒரு வாரமாக உள்ளூர், வெளியூர் சந்தைகளில் தக்காளி விலை கடும் வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளது.

**விவசாயிகள் கவலை**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் திங்கள்கிழமை 16 டன் தக்காளி விற்பனைக்கு வந்தது. 14 கிலோ கொண்ட ஒரு பாக்ஸ் தக்காளி ரூ.30 விற்பனையானது. கிலோ ரூ.2 முதல் 2.50 வரை விற்பனையானது. அதனால்,

இந்த வறட்சியிலும் சாகுபடி செய்து உற்பத்தி செய்த தக்காளிக்கு விலை கிடைக்காமல் உள்ளூர் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இதுகுறித்து தோட்டக்கலைத் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

தக்காளி, வெங்காயம் போன்ற காய்கறிகள் அன்றாட சமையலில் அவசியம் பயன்படுத்தக்கூடியவை. அதனால், ஆண்டு முழுவதும் தக்காளி, வெங்காயத்துக்கு வரவேற்பு உண்டு. ஆனால், தேவைக்கு அதிகமாக வரத்து, உற்பத்தி அதிகமாகும்போது இவற்றின் விலை கடும் வீழ்ச்சியடைகிறது. தற்போது பெங்களூரு ஹைபீரிட் தக்காளி, தமிழக சந்தைகளுக்கு வரத்தொடங்கியுள்ளன.

அதனால், உள்ளூர் தக்காளியை வாங்க வியாபாரிகள் ஆர்வம் காட்டாததால் இந்த விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தக்காளிக்கு நிலையான விலை கிடைக்க, தக்காளி மூலம் உணவுப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், குளிர்பதனக் கிடங்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்..

**அரிதாகி வரும் நாட்டுத்தக்காளி**

கடந்த 2000-ம் ஆண்டுக்கு முன் வரை, விவசாயிகள் நாட்டுரகத் தக்காளியை மட்டுமே பயிரிட்டனர். நாட்டுத் தக்காளியில் ஹெக்டேருக்கு 15 டன் மட்டுமே மகசூல் கிடைத்தது. ஆனால், ஹைபிரீட்டில் ஹெக்டேருக்கு 30 டன் முதல் 50 டன் வரை மகசூல் கிடைத்ததால், விவசாயிகள் கடந்த பத்து ஆண்டாக பரவலாக ஹைபிரீட் தக்காளி பயிரிடத் தொடங்கி விட்டனர். அதனால், நாட்டுத் தக்காளி அரிதாகி விட்டது.

நாட்டுத் தக்காளியில் காணப்படும் ருசி, சத்து ஆகியவை தற்போது ஹைபிரீட் தக்காளியிலும் கிடைப்பதால் பொதுமக்களும் ஹைபிரீட் தக்காளியை விரும்பி சாப்பிடத் தொடங்கி விட்டனர். நாட்டு தக்காளி விலை கிலோ 700 ரூபாய் விற்கிறது. ஹைபிரீட் தக்காளி விலை ரூ.30,000 வரை விற்கிறது. ஹைபிரீட்

தக்காளி விலை அதிகம் என்றாலும், கூடுதல் மகசூல், நோய் பாதிப்பு குறைவு என்பதால் விவசாயிகள் ஹைபிரீட் சாகுபடி செய்வதிலே ஆர்வம் காட்டுவதால், நாட்டுத் தக்காளி ரகம் சந்தைகளில் அரிதாகி வருகிறது.

## புதுக்கோட்டை: வறட்சியால் வைக்கோல் தட்டுப்பாடு: கால்நடை வளர்ப்பு பாதிப்பு



புதுக்கோட்டை மாவட்டத்தில் நிகழாண்டு ஏற்பட்டுள்ள கடும் வறட்சியை எதிர்கொண்டு தங்களைப் பாதுகாத்துக்கொள்வதே பெரும் சவாலாக உள்ள சூழலில் வைக்கோல், தண்ணீர் பற்றாக்குறையால் கால்நடைகளைப் பராமரிப்பது கூடுதல் சுமையாக இருப்பதாக கால்நடை பராமரிப்பாளர்கள் கூறுகின்றனர்.

தமிழகத்தில் வறட்சி மாவட்டங்களில் ஒன்றாகவும் விவசாயம் சார்ந்த சூழலைக் கொண்டுள்ளதுமான புதுக்கோட்டையில் மழை, ஆழ்குழாய், காவிரி நீரைக்கொண்டு பயிர் சாகுபடி மேற்கொள்ளப்படுவதால் அதைச் சார்ந்துள்ள கால்நடை வளர்ப்பிலும் மக்கள் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர்.

**சொட்டுத் தண்ணீரில்லை...**

நிகழாண்டு வடகிழக்குப் பருவமழை சராசரியாகக் கிடைக்க வேண்டிய மழையளவு 328 மி.மீட்டருக்குப் பதிலாக 101 மி.மீட்டர் மட்டுமே பெய்துள்ளது. இதனால், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சுமார் 5,800 குளங்களிலும் சொட்டுத்தண்ணீர் கூட இல்லை. மேலும், இம்மாவட்டத்துக்கு முறையாகத் திறந்து விடாததால் அறந்தாங்கி, மணமேல்குடி, ஆவுடையார்கோவில், கறம்பக்குடி வட்டாரத்தில் 25,000 ஹெக்டேரில் மேற்கொள்ளப்பட்ட சம்பா நெல் சாகுபடியோடு மாவட்டத்தில் சுமார் 1.25 லட்சம் ஹெக்டேரில் சாகுபடி

செய்யப்பட்ட பயிர்கள் முளைவிட்டுக் கருகியதால் விவசாயிகள் நேரிடையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் 25 ஆயிரம் ஹெக்டேரிலான காவிரிப் படுகைப் பகுதியில் அறுவடைக்குப் பின்னர் வைக்கோல் இம்மாவட்டத்தின் கால்நடைகள் தேவைக்கு பயன்பட்டது போக எஞ்சியவை விற்பனைக்காக கேரளாவுக்கு கொண்டு செல்லப்பட்டது.

**பராமரிப்பாளர்கள் பெரும் அவதி**

தற்போது கடும் வறட்சியால் சம்பா நெல் சாகுபடி பாதிக்கப்பட்டு மேய்ச்சல் நிலங்களெல்லாம் பாலைவனமாக மாறுவதால் வைக்கோலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மாடுகளைப் பராமரிக்க இரண்டு மடங்கு விலை கொடுத்து தஞ்சை, திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து வைக்கோல் வாங்கி வந்து கால்நடைகளுக்குத் தீவனமாக பயன்படுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இந்த விலை கொடுத்து வாங்க முடியாத விவசாயிகள் மாடுகளைச் சந்தையில் விற்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

**மாடுகளை விற்கின்றனர்…**

இதுகுறித்து விவசாயி ராமசாமி கூறியது: “டெல்டா பகுதியில் ஆண்டுக்கு சுமார் 65 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்து நெல் கொள்முதல் செய்யப்படும். இந்தவருஷம் காஞ்சுபோனதால் இதுவரை கொள்முதல் நிலையம் திறக்கவில்லை. 80 விழுக்காடு நெல், விதைப்பு முறையில் சாகுபடி மேற்கொள்ளப்படுவதால் அறுவடையின்போது நெல்லை மட்டும் எடுத்துக்கொண்டு கால்நடைகளுக்கும், இயற்கை உரத்துக்கும் வைக்கோலை வயலிலேயே விட்டுச்செல்வதால் இப்பகுதியினர் சிரமம் இல்லாமல் மாடு வளர்த்தனர்.ஆனால், தற்போது வயல் வெளியில் கூட்டம் கூட்டமாகச் சுற்றித்திரியும் மாடுகள் குடிக்கத் தண்ணீர் கிடைக்காமல் அல்லல்படுகின்றன. சிலர் நமக்கே குடிக்கத் தண்ணீர் இல்லை

இதுகளுக்கெல்லாம் எங்கெ போய் தண்ணீர் கொண்டுவருவது என விரக்தி அடைந்து மாடுகளை விற்கின்றனர்" என்றார்.

**இருமடங்கு விலை உயர்வு**

குளமங்களம் உழவர் மன்ற அமைப்பாளர் முத்துராசு கூறிய போது, "மாவட்டத்தின் டெல்டா அல்லாத பகுதிகளில் வளர்க்கப்படும் மாடுகளுக்கு டெல்டா பகுதிகளில் இருந்து கடந்த ஆண்டு ஒரு டிராக்டர் கொள்ளளவு உள்ள வைக்கோலை ரூ.5 ஆயிரத்துக்கும், சரக்கு ஆட்டோ என்றால் ரூ.3 ஆயிரம் கொடுத்தும் வாங்கிப் பயன்படுத்தினோம். ஆனால், இந்த வருடம் டெல்டாவில் சாகுபடி கருகினதால் வைக்கோல் விலை ரெண்டு மடங்கு உயர்ந்துள்ளது.அரசு ரூ.10 லட்சத்தில் 125 தீவனக் கிடங்குகள் அமைத்து அதன் மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் சோளத் தட்டை, வைக்கோல் உள்ளிட்ட தீவனம் வழங்குவதாக அறிவிக்கப்பட்ட திட்டம் கிடப்பிலேயே உள்ளது. இத்திட்டம் தொடங்கினாலும் விவசாயிகளிடம் இருந்தால்தானே கொள்முதல் செய்து அவுங்களும் கொடுக்க முடியும். அதனால ஆடு, மாடு எல்லாத்தையும் வித்துப்புட்டு நாமளும் டவுன் பக்கம் போய் ஒரு வேலை பார்த்து பிழைச்சுக்க வேண்டியதுதான்" என்றார்.

**சட்டப்பேரவையில் வலியுறுத்தப்படும்**

இதுகுறித்து விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநிலத் தலைவரும், பெரியகுளம் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினருமான (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்) எஸ்.லாசர் கூறியது: "புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவும், கால்நடைகளைப் பாதுகாக்கவும், குடிநீர்த் தேவைக்கும் மேட்டூரில் இருந்து தண்ணீர் திறந்துவிடவும் நடைபெற உள்ள சட்டப்பேரவைக் கூட்டத்தின் போது முதல்வரிடம் வலியுறுத்தப்படும்" என்றார்.

## நாமக்கல்: சேந்தமங்கலத்தில் கேரட், பீட்ரூட் இயற்கை உரம் மூலம் விளைச்சல்



குளிர் பிரதேசங்களில் விளையும் கேரட், பீட்ரூட் உள்ளிட்ட காய்கறிகளை சேந்தமங்கலத்தில் விளைவித்து ஒரு விவசாயி சாதனை படைத்துள்ளார். இயற்கை உரத்தை மட்டுமே முழுமையாகப் பயன்படுத்துவதால், இவரது விளை பொருட்களுக்கு மக்களிடம் அதிக வரவேற்பு உள்ளது.

### குளிர் பிரதேச பயிர்கள்

கேரட், பீட்ரூட், காலிஃப்பிளவர் ஆகியவை ஓசூர், பெங்களூரு போன்ற குளிர் அதிகமுள்ள பகுதிகளில் விளையும் பயிர்கள். மற்ற பகுதிகளில் கத்திரி, வெண்டை காய்கறிகள் மட்டுமே விளையும். இந்த நிலையில், நாமக்கல்

மாவட்டம் சேந்தமங்கலம் அருகேயுள்ள பச்சுடையாம்பட்டி புதூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சிவக்குமார், குளிர் பிரதேசங்களில் விளையும் கேரட், பீட்ரூட், காலிஃப்பிளவர் உள்ளிட்ட காய்கறிகளை விளைவித்து சாதனை படைத்துள்ளார். இயற்கை உரங்களை மட்டும் பயன்படுத்தி, இவற்றை சாகுபடி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து விவசாயி சிவக்குமார் கூறியது:

இரு தலைமுறைகளாக விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறோம். காலச் சூழலுக்கு ஏற்ப விவசாயம் செய்வதில் எனது தந்தை ராமசாமி ஆர்வம்காட்டி வந்தார். அதன்படி, எங்களுக்கு சொந்தமான நிலத்தில் கேரட் உள்ளிட்ட காய்கறிகளைப்

பயிரிடத் தொடங்கினோம். ஊட்டி, கொடைக்கானல், ஓசூர், பெங்களூர் பகுதிகளில் விளையும் கேரட், பீட்ரூட், காலிஃபிளவர் ஆகியவற்றைப் பயிரிட்டோம்.

## 20 ஆண்டாக சாகுபடி

இந்தப் பயிர்கள் ஓசூர், பெங்களூரு உள்ளிட்ட பகுதிகளில் ஆண்டு முழுவதும் விளையும். அதற்கேற்ற குளிர் சீசன் அங்கு நிலவும். நாங்கள் குளிர் காலத்தில் இந்தப் பயிர்களை விளைவித்தோம். நல்ல விளைச்சல் கிடைத்தது. கடந்த 20 ஆண்டுகளாக குளிர் சீசன் சமயத்தில் இவற்றைப் பயிரிட்டு வருகிறோம். மற்ற மாதங்களில் கீரை உள்ளிட்ட வேறு பயிர்களை சாகுபடி செய்வோம்.

நாங்கள் விவசாயம் தொடர்பாக கல்வி பயிலவில்லை.

தந்தையிடம் கற்ற அனுபவப் பாடம் மூலமே பயிர் சாகுபடி செய்து வருகிறோம். நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் அவ்வப்போது வந்து, கேரட், பீட்ரூட் விளைச்சலைப் பார்வையிடுவர். பயிர் விளைச்சலுக்கு செயற்கை உரத்தைப் பயன்படுத்துவதில்லை. மாட்டுச் சாணம் உள்ளிட்ட இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்துகிறோம்.இங்கு விளைவிக்கப்படும் கேரட், பீட்ரூட் ஆகியவை உள்ளூர் சந்தைகளீல் விற்பனை செய்யப்படும். இயற்கை உரத்தைப் பயன்படுத்துவதால், மக்களும் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர், என்றார்.

பொதுவாக கேரட், பீட்ரூட், காலிஃபிளவர் போன்ற பயிர்கள் வளர மிகவும் குளிர்ந்த சூழலும், அதிக வெப்பமில்லாத நிலப்பகுதியும் அவசியம். சமவெளியில் இதற்கு சாத்தியமில்லை. ஆனால், சமவெளியில் இவற்றை சாகுபடி செய்தது வியப்புக்குரியது. விவசாயம் நலிவடைந்து வரும் சூழலில், காலத்திற்கேற்ற பயிர்களைச் சாகுபடி செய்யும் விவசாயத்துக்கு மக்கள்ஆதரவு அதிகரித்துள்ளது.